★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ கெவி தஞ்சூர்
★ பாட்லி
★ பட்டுவேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
பிளஸ்வ் பீஸ் வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 சுக்கில ஞூ பங்குனி மீ 10 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷஃபான் பிறை 25 (23-03-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 41

மங்கள வைபவங்களுக் கேற்ப உடுபுடவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்
உட்புறம்
யாழ்ப்பாணம்.

முச்சந்தி முரளி



அன்பா அனுப்பி வைக்கப் போறார் போலை...!

★ இலங்கையை விட்டு

# இந்தியப் படையினர் நாளையுடன் வாபஸ்!

## 32 மாதகால சரித்திரம் முடிகிறது

கொழும்பு, மார்ச் 23

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படையினர் நாளை நண்பகலுடன் முற்றாக வாபஸ் பெற்றுவிடுவர்.

1987 ஜூலை கடைசி வாரத்தில் இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து இலங்கையின் வடக்கு—கிழக்கு பகுதியில் வந்திறங்கிய இந்தியப்படையினர் 32 மாத காலத்தின் பின்னர் இலங்கையிலிருந்து முற்றாக விலக்கப்படுகின்றனர்.

தற்போது திருகோணமலை சீனக்குடா 'கிளபன்பேர்கில்' தங்கியிருக்கும் இந்தியப் படையின் இறுதி அணி, நாளை நண்பகலுடன் அங்கிருந்து வெளியேறிவிடுமென உத்தியோகபூர்வ செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியப்படையினரை வழியனுப்பி வைக்கும் நிகழ்ச்சி தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக கொழும்பிலிருந்தும், பிற இடங்களிலிருந்தும்பெரும் எண்ணிக்கையான பத்திரிகையாளர்களை திருகோணமலைக்கு அழைத்துச்செல்ல இலங்கை அரசின் தகவல் திணைக்களம் ஏற்பாடு செய்துவருகிறது.

இந்தியப் படை இலங்கையில் தங்கியிருந்தபோது விடுதலைப் புலிகளுடன் இடம் பெற்ற போரில் சுமார் ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான ஜவான்களை இழந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையிலிருந்து வாபஸ் பெறப்படும் இந்தியப்படை அணிகள் ஆந்திராவிலும் தமிழ்நாட்டிலும் தயார்நிலையில் நிலைநிறுத்தப்பட்டுவருவது தெரிந்ததே. (உ)

நாளைய சஞ்சீவியில்
சனிப்பெயர்ச்சி பலன்கள்
நட்சத்திரவாரியாக பிரசுரமாகிறது.

## வெளிநாட்டுக் கடிதங்கள் கிணற்றிலிருந்து மீட்பு!

வவுனியா, மார்ச் 23

விநியோகிக்கப்படாத வெளிநாட்டுக் கடிதங்கள் கட்டுக்கட்டாக கிணறு ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

வவுனியா பிரதம அஞ்சல் அலுவலக வளவிலுள்ள கிணறு ஒன்றில் இருந்தே இவை கண்டுபிடிக்கப்பட்டன.

வவுனியா அஞ்சல் அலுவலக சிற்றூழியர் ஒருவர் இதனைக் கண்டுபிடித்தார்.

பாவனையில் இல்லாத பிரஸ்தாப கிணறு பாதுகாப்பின் நிமித்தம் மூடப்பட்டிருந்தது.

வவுனியா அஞ்சலகத் திகதி முத்திரையுடன் கூடிய கடிதங்களும் இவற்றில் அடங்கி இருந்தன.

இக் கடிதங்கள் அத்தனையும் உடைக்கப்பட்டிருப்பதால் உள்ளே இருந்த ''ட்ராப்ட்டு''கள் போன்ற பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (இ-164)

## சார்க் மாநாட்டை எங்கே நடத்துவது?

### இழுபறி நிலை நீடிப்பு

சார்க் மாநாட்டை எங்கே நடத்துவது என்பது குறித்து பிரச்சினை தொடர்ந்து இழுபறிப்படுகிறது.

இது தொடர்பாக இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்த பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் யாக்குப் கான் முடிவு எதுவும் இல்லாத நிலையில் நேற்று நாடு திரும்பினார்.

சார்க் அமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய ஐந்து நாடுகளுடன் ஆலோசனை நடத்தி விட்டு பாக். அமைச்சர் மீண்டும் இலங்கை வருவார் என்று தெரியவருகிறது.

சார்க் மாநாட்டை இலங்கையில் நடத்த வேண்டும் என்பது குறித்து இலங்கை தொடர்ந்து பிடிவாதமாக இருந்து வருகிறது.

சார்க் அமைப்பின் பெரும்

( 7ஆம் பக்கம் பார்க்க)

## 6 ஆவது திருத்தத்தை நீக்குவதா? அரசு இன்னும் முடிவு இல்லை

### அமைச்சர் ரஞ்சன் தகவல்

கொழும்பு, மார்ச் 23

அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது குறித்தும், வடக்கு-கிழக்கு மாகாண சபையைக் கலைப்பது குறித்தும் அரசு இன்னும் தீர்க்கமான முடிவு எதனையும் மேற்கொள்ளவில்லை.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டின்போது இத்தகவலை வெளியிட்டார்.

இந்த இரு விடயங்கள் குறித்தும் அரசு விரிவாக ஆராய்ந்து வருகிறது. தீர்க்கமான முடிவு எடுக்க இன்னும் சில காலம் செல்லும் என்றார் அமைச்சர். [உ]

## படை விலகலுக்குப் பின்னர் முக்கிய முடிவுகள் வெளிவரும்!

கொழும்பு, மார்ச் 23

இந்தியப்படை இலங்கையிலிருந்து வாபஸ் பெறப்பட்ட பின்னர் சில முக்கியமான அரசியல் முடிவுகள் குறித்து அரசாங்கம் அறிவிக்கும் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாண சபை மற்றும் அரசமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவது உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து அரசாங்கத்தின் அறிவிப்பு வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாண சபையின் நிதி விடயங்கள், நியமனங்கள் உட்பட பல நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் நடத்துவது பற்றியும் அறிவித்தல் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் - அரசாங்கப் பிரதிநிதிகள் தமது பேச்சுவார்த்தைகளில் முக்கிய விடயங்கள் குறித்து அமைதிப்படை விலகலுக்குப் பின்னரே ஆராய்ந்து முடிவு செய்வர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

## தலைகுனிவு ஏற்பட்ட வேளையில் தானாக களத்தில் குதித்த அன்னை!

### நினைவு தினக்கூட்டத்தில் புகழாரம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

தமிழீழ மக்களுக்கு தலைகுனிவும் தமிழீழ போராட்டத்துக்கு களங்கமும் ஏற்பட்ட வேளையில் அன்னை பூபதி அதை துடைத்து போராட்டத்தை உறுதியுடன் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காக எதுவித வற்புறுத்தலுமின்றி தானாக முன் சென்று தனது போராட்டத்தை சட்டப்படி உறுதிப்படுத்த மேற்கொண்டார்.

இவ்வாறு நேற்றிரவு காங்கேசன்துறை நடேஸ்வரா இசை அரங்கில் நடைபெற்ற அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் நினைவு தினக் கூட்டத்தில் உரையாற்றும் போது விடுதலைப் புலிகளின்

(7-ஆம் பக்கம் பார்க்க)

## தபால் நிலையம் முன்பாக வேலை மறிப்புப் போர்

யாழ்ப்பாணம் மார்ச் 23

தபால் திணைக்களத்தின் யாழ் பகுதியில் பணிபுரியும் சமயாசமய ஊழியர்கள் ஆறு கோரிக்கைகளை முன் வைத்து யாழ் பிரதம தபால் நிலையத்தின் முன்னால் நேற்று வேலை மறிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் நேற்றுக் காலையில் யாழ் மாவட்ட தபால் சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

காலை 5 மணி முதல் வேலை மறிப்பு இடம் பெற்றது.

யாழ் மாவட்ட தபால் அத்தியட்சகர் இவர்களின் கோரிக்கைகளை பரிசீலித்து 24 மணி நேரத்திற்குள் நடவடிக்கை எடுப்பதாக உறுதி வழங்கியதை அடுத்து நண்பகல் 11 மணியளவில் வேலை மறிப்புப் போராட்டம் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (உ-9)

## புதிய நியமனம், பதவி உயர்வு உடனடியாக நிறுத்தம்!

### அமைச்சரவை நேற்று முடிவு

அரசாங்க சேவைக்கான சகல நியமனங்களும் பதவி உயர்வுகளும் ஆட்சேர்ப்பும் உடனடியாக நிறுத்தப்படவுள்ளன.

அமைச்சரவை இது சம்பந்தமான முடிவை நேற்று எடுத்தது.

சமயாசமய, தற்காலிக நியமனங்கள் ஊர்ஜிதமாக்கப்படுவதும் உடனடியாக நிறுத்தப்படுகின்றது.

அமைச்சரவையின் இத்திர்மானம் அரச கூட்டுத்தாபனங்கள், மாகாண சபைச் சேவைகள், அரசுடமையாக்கப்பட்ட ஸ்தாபனங்கள், ஏனைய அரசு நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்றும் அறிவிக்கப்படும்.

இதுபற்றிய கூடுதல் விவரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்று நேற்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## படையை வழியனுப்ப ரஞ்சன் திருமலைக்கு

திருகோணமலை, மார்ச் 23

நாளை திருகோணமலை சீனக்குடாவிலிருந்து வெளியேறும் இந்திய அமைதிப் படையின் இறுதி அணியை வழியனுப்பி வைப்பதற்காக வெளி விவகார அமைச்சரும், பாதுகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா நாளை திருகோணமலைக்குச் செல்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ)

## யாழ். இந்து அதிபரின் இடமாற்றம் ரத்து!

கொழும்பு, மார்ச் 23

யாழ். இந்துக் கல்லூரி அதிபரின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. எஸ். பொன்னம்பலத்தை கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் —

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கத்தை யாழ். இந்துக் கல்லூரிக்கும் கடந்த 15 ஆம் திகதி முதல் இடமாற்றம் செய்து விடுக்கப்பட்ட உத்தரவே ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக அறியவருகிறது.

இந்த இடமாற்ற உத்தரவு ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக. கல்வி அமைச்சுச் செயலாளர் தமக்குத் தெரிவித்தார் என்று இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க செயலாளர் திரு. த. மகாசிவம் தகவல் வெளியிட்டுள்ளார். (உ)

### அவசரகாலச் சட்டத்தின் கீழ்

## படையினருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் நீக்கப்படும்

கொழும்பு, மார்ச் 23

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ள பல அதிகாரங்கள் நீக்கப்படவுள்ளன.

இது பற்றிய விவரங்களை இன்னும் ஒரு வாரத்தில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவிக்க உள்ளது.

தற்போதுள்ள சட்டவிதிகளின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரம் பெற்ற ஆயுதப் படை அதிகாரி அல்லது பொலீஸ் அதிகாரி ஒருவர் தேடுதல் நடத்தி சந்தேக நபர்களைத் தடுத்து வைக்கும் அதிகாரம் பெற்றுள்ளார்.

இந்த விதியும் நீக்கப்படவிருக்கும் அவசரகாலச் சட்ட பிரிவுகளில் ஒன்றாகும்.

இதன் பின்னர் சாதாரண சட்டங்களின் கீழ் பொலீஸார் மட்டுமே தேடுதல் நடத்தி சந்தேகநபர்களை தடுத்து வைக்கும் அதிகாரத்தைப் பெறுகின்றனர்,

சட்டம் ஒழுங்கு பராமரிப்பு ஆகியவற்றை பொலீஸார் மட்டுமே மேற்கொள்ளக் கூடிய விதத்தில் அவசரகால சட்டவிதிகள் தளர்த்தப்படும் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்துள்ளார். (உ-எ)

## வை. கோபாலசாமி மீண்டும் எம். பி.!

சென்னை, மார்ச் 23

தமிழகத்திலிருந்து ராஜ்ய சபைக்கு எம். பிக்களாக ஆறு பேர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் 5 பேர் தி.மு.க. உறுப்பினர்கள். எஞ்சியவர் அ.தி.மு.க. உறுப்பினர்.

தி.மு.க வைச் சேர்ந்த வை. கோபாலசாமி, கே. கிருஷ்ணன், மிஸா கணேசன், கே. கே. வீரப்பன், டி. ஏ. அஹமது ஸகி ஆகியோரும் அ. தி. மு. கவைச் சேர்ந்த எஸ். மாதவன் ஆகியோரே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

ராஜ்யசபைக்கு புதிய எம். பிக்களை அந்தந்த மாநில சட்டசபை உறுப்பினர்கள் தெரிவு செய்வது தெரிந்ததே.

இத்தேர்தலை அடுத்து ராஜ்யசபையில் தி. மு. கவின் பலம் 10 ஆக அதிகரிக்கும் அ.தி.மு.கவின் பலம் 6இல்

( 7 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

23- 3 -1990
வெள்ளிக் கிழமை பங்குனி 10
சுபநேரம்:
6-17 முதல் 7-47 வரை
இராகுகாலம்
10-47 முதல் 12-17 வரை

### பயிலுநர் ஆசிரியர் தெரிவு:

## முறைகேடுகள் குறித்து முழு அளவில் விசாரணை

### கல்வி அமைச்சு உத்தரவு

கொழும்பு, மார்ச் 23

பயிலுனர் ஆசிரியர் நியமனத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் குறித்து முழு அளவில் விசாரணை நடத்தப்படும்.

இது தொடர்பாக தெரிவிக்கப்படும் ஒவ்வொரு புகார் மீதும் தனித்தனியாக விசாரணை நடத்த கல்வி அமைச்சு முடிவு செய்திருப்பதாக அறிய வருகிறது.

இந்த விடயத்தில் ஏதேனும் முறைகேடுகள் நடைபெற்றிருப்பதாக தெரிய வந்தால் அதுபற்றி தமக்கு அறிவிக்கும்படி கல்வி அமைச்சர் திரு. லொக்குபண்டா நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் எழுதியுள்ள கடிதத்தில் கேட்டிருக்கிறார்.

இவ்வாறான முறைப்பாடுகள் ஏதேனும் இருப்பின் அது தொடர்பாக மாவட்

(7-ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

14 இஞ்சி கிறைண்டர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி 53, K. K. S. வீதி, யாழ்ப்பாணம். (3001)

சுன்னாகம் A. G. A காரியாலயத்துக்கு அருகாமையில் 2 பரப்புக் காணியுடன் சேர்ந்த வீடு உடன்விற்பனைக்குண்டு. விபரங்கட்டு, சித்திர கலா ஸ்ருடியோ, சுன்னாகம். (2900)

O/L, A/L அனைத்து பாடங்களுக்கான Tutes மலிவு விலையில் (Clearence Sale) 21-3-90 முதல் 5-4-90 வரை விற்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-4121)

பின்வரும் 2 லொறிகளும், கார் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. 24 Sri 6431 B.M.C. லொறி, 24 Sri 3251 B.M.C லொறி, Car 8 Sri 3174 மொறிஸ் ஒக்ஸ்போட் Paper Cutter 24, Inehes தொடர்பு கொள்ளவும். எஸ். சுப்பிரமணியம் & கொம்பனி, 53, K.K.S. றோட், யாழ்ப்பாணம். (2897)

### 90 ஆம் ஆண்டுப் பஞ்சாங்கம்

இரகுநாதையர் வாக்கிய, திருக்கணித பஞ்சாங்கம் வியாபாரிகட்கு தொகையாக விசேட கழிவுடன் விற்பனைக்குண்டு. ஸ்ரீகாந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம். (சி/3487)

இரகு வாக்கிய பஞ்சாங்கம் திருக்கணிதப் பஞ்சாங்கம் பெரும் திரளாக விற்பனைக்கு உண்டு. தங்களின் சகல ஆவணங்களும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரற், எடுத்துக்கொள்ள மக்மிலன் புத்தகசாலை No 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (சி-3977)

### வீடுவளவு விற்பனை

சாவகச்சேரி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் வீடும் 6 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு. அம்பாள் அரிசி ஆலை, பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி. [2893]

### மலிவு விற்பனை

அப்பியாசக் கொப்பிகள் உபகரணங்கள், பன்சிச் சாமான்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் வாழ்த்து மடல்கள் என்பன விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விஷேச கழிவு உண்டு. றூபா சென்ரர், 646, ஆஸ்பத்திரி வீதி. (இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் முன்பாக) யாழ்ப்பாணம். (12079)

### தேவை

மாநகரசபை எல்லைக்குள் ஒரு சிறு வீடு அல்லது அனெக்ஸ் ஒரு தாய்க்கும் மகளுக்கும் எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்பு திருமதி இ. சந்திரசேகரி 'கோவிந்தம்' காரைக்கால் றோட், இணுவில் கிழக்கு, இணுவில். [3002]

அனுபவம்மிக்க, கைதேர்ந்த பாண், பணிஸ், பிஸ்கட், கேக் தயாரிப்பாளர்கள் தேவை. தங்குமிட வசதியுண்டு. தொடர்பு கொள்ளவும். ராணி பேக்கரி, ஓராங்கட்டை சந்தி, பருத்தித்துறை. [3003]

Tropic Greenisle Seeds கோடை காலத்திலும் வளரக்கூடிய கோவா, தக்காளி, வெண்டி, பயிற்றை போன்ற விதைகளை விற்பனை செய்வதற்கு கிராமம்தோறும் விற்பனையாளர்கள் தேவை விண்ணப்பிக்கவும். கு. பத்மநாதன் 76/2, புங்கன்குள வீதி, யாழ்ப்பாணம். [12124]

### தேவை

எலக்ரோனிக் கடிகாரங்கள் திருத்துவதில் சிறந்த அனுபவம் உள்ள ஒருவர் தேவை. 20இற்கும், 30இற்கும் இடைப்பட்ட வயதுள்ளவர் விரும்பத்தக்கது. No. 653, C/o உதயன், யாழ்ப்பாணம். (சி/4125)

### மணமகன் தேவை

வடமராட்சியைப் பிறப்பிடமாகக்கொண்ட இந்து உயர் வேளாள குலத்தைச் சேர்ந்த A/L வரை படித்த 30 வயதுடைய மணமகளுக்கு அரச அல்லது சொந்தத் தொழில் புரியும் மாதம் 2000 வருமானமுடைய அதே குல மணமகன் தேவை. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். சாதகக் குறிப்புடன் தொடர்புகொள்ளவும் வி. இலக்கம் 110 மே/பா உதயன், யாழ்ப்பாணம். [12072]

### மணமகள் தேவை

யாழ் உயர் வேளாள குல பெற்றோர் தமது சுவிற்சலாந்தில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற ஹோட்டல் முகாமைத் துறையில் பயிலுனராக வேலை பார்க்கும் செவ்வாய் குற்றமுடைய மகனுக்கு முப்பது வயதிற்குட்பட்ட மணமகளைத் தேடுகின்றனர். திருமணம் இந்தியாவில் அல்லது சுவிசில் ஏற்பாடு செய்யப்படும். விபரங்களுடன் தொடர்புகொள்ளவும். 654, C/o Uthayan. (3005)

### தவறிவிட்டது

யோசேப் இராஜநாயகம் ஆகிய எனது அடையாள அட்டையும், சாரதி லைசென்சும் வேறு சில பொருட்களும் 22-3-90 அன்று அம்பிகாபதி பன்சிகுட்ஸ் கடைக்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12094)

### Typewriters

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும், நாடுங்கள் FUDO, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில்) (சி/3451)

### றோனியோ

றோனியோ தட்டச்சு மற்றும் சகல அச்சு வேலைகளும் குறித்த தவணையில் சிறந்த முறையில் செய்து கொள்ள தயா அச்சகம், 138, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (மனோகரா சந்தி) (4133)

### காஸ் குக்கர் திருத்த

உங்களுடைய Gas குக்கரில் பிழைகளா? இல்லையெனில் புதிய உதிரிப் பாகங்கள் மாற்ற வேண்டுமா எதுவாயினும் மிகத் திறமையான முறையில் குறித்த தவணையில் திருத்திக் கொடுக்கப்படும். அதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம் D. முஸ்தபா 38, 1ம் குறுச்குத் தெரு, யாழ்ப்பாணம். (2862)

## NEW SCIENCE ACADEMY

Infront of B.M.C. Jaffna.

### EVENING PAPER CLASS

செல்வரஞ்சன்
CHE - BASIC
Mon, Fri- 3.30 p.m

சோதிலிங்கம்
PHY - MODEL PAPER
Mon, Fri- 4.30 p.m.

தங்கராஜா
ZOO - EMBRYOLOGY
Tue, Thu- 3.30 p.m.

செல்வநேசன்
BCT - ECOLOGY
Tue, Thu- 4.30 p.m.
(சி 4128)

## நீங்காத நினைவில்

(மார்ச்- 23)



● கே. டானியல் ●

(மக்கள் புரட்சி எழுத்தாளர்)

இலங்கை மண்ணில்: பிறப்பு:- 25-03-1927

இந்திய மண்ணில்: இறப்பு:- 23-03-1986

''இலக்கியத்தினால் சகலதையும் சாதிக்க முடியும் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை என்ற மாயைத் திரையை கிழித்தெறிந்து விட்டு வெளியே வாருங்கள் சமூக மாற்றத்திற்கான உண்மைக்கு விசுவாசமான செயற்பாடுகள் நடக்கும் போது வெறும் பார்வையாளனாக மட்டும் நில்லாது அதன் பங்காளர் ஆகுங்கள்''

கே. டானியல்-

என்றும் நினைவோடு:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
தோழர்கள், பொதுமக்கள்.

''வசந்தம்''
76/2, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (12087)

## ★ பிறந்தநாள் வாழ்த்து ★

பண்ணாகத்தில் வசித்து
தற்போது நோர்வேயில் இருக்கும்
தேவராசா சந்திராதேவி தம்பதிகளின்
செல்வப் புதல்வன்

### செல்வன் அரவிந்தன்

23-03-90 இன்று தனது முதலாவது பிறந்த நாளை நோர்வேயில் கொண்டாடும் வேளை உடுப்பிட்டி பெரியப்பா மகேந்திரா (சவூதி), பெரியம்மா மனோன்மணி, அப்பப்பா S. R. அரியரட்ணம் (Retd. Principal) அண்ணாமார், ரூபன், கரன், அக்காமார், ரஜனி' ரதி, மாமா கிருஷ்ணமூர்த்தி (K.C.W; K. K. S.), ஆகியோர் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றனர். [2932]

## பனை அபிவிருத்தி ஆய்வு

பனை அபிவிருத்திச்சபை, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அமைப்பு ஆகியவற்றின் அனுசரணையுடன் பனைவள அபிவிருத்தி ஆய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்வு தொடர்பாக இரண்டு மாதங்களுக்கு (சித்திரை, வைகாசி - 1990) வெளிக்கள ஆய்வாளர்கள் வடக்கு-கிழக்கு பிரதேசத்திலிருந்து தேவைப்படுகிறார்கள். வெளிக்கள ஆய்வாளர்களுக்கு தகுந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும். சேர விரும்புபவர்கள் கல்வித்தகமை விபரங்களுடன் இம்மாத முடிவுக்குள் தொடர்பு கொள்ளவும்.

பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன்,
கலைப்பீட அலுவலகம்,
யாழ். பல்கலைக்கழகம்.

21-03-1990. [2947]

## 5-ம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம்: 17-04 1956

★●★

மறைவு: 17-03-1985

திதி: 23. 03. 1990

### திருமதி தவமணி சக்திவடிவேல்

அணையாத பேரொளியே!
ஒளிவீசும் மணிவிளக்கே
இதயத்தை இடிதாக்க
எமை விட்டகன்றதுமேன்
விழியோரம் பனித்துளியாய்
விழி நீரும் உகுத்திடவே
மலரான உன் பாத
மலரடியை அஞ்சலித்தோம்

கணவர், பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரர்கள், மாமி, மச்சாள்மார்,
மச்சான், உறவினர், நண்பர்கள்,

சரஸ்வதி மகால்,
கோணாவளை, வயாவிளான்.

மந்துவில்,
கொடிகாமம். (2943)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி ஜெயரத்தினம் பாலராஜா

மலர்வு: 28-11-1921

உதிர்வு: 23-03-1989

நீ மறையவில்லை இன்றும் வாழ்கிறாய்
அன்பான தாயாய், மனைவியாய் எங்கள் இதயத்தில்

நினைவால் துயருறும்
அன்பு மகன், கணவர், குடும்பத்தினர்,
நண்பர்கள்.

5, சாசல் வீதி,
பம்பலப்பிட்டி, கொழும்பு-4. [12071]

## தோட்டப் பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறை தீரும்

கொழும்பு, மார்ச் 23

தோட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறைகளை நீக்கும் முகமாக விசாரணை நடத்தி நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி கல்வி அமைச்சர் கல்விச்சேவை ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கல்வி கலாசார ராஜாங்க அமைச்சர் திருமதி சுனேத்திரா ரணசிங்க நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் திரு. மங்கள முனசிங்க எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு சொன்னார். (இ-2)

## Project Management Services Ltd.

53, Brown Road, Neeraviadi, Jaffna

Engineering Consultants & Project Managers

Due to increased workload we require the following additional personnel to join our staff immediately.

Chartered Civil / Structural Engineer
Chartered Mechanical Engineer
Chartered Electrical Engineer
Construction Manager
Purchasing Officer
Quantity Surveyor
Draughtsmen
Clerk Cum Typist

Salary Negotiable. If interested please write to the Operations Manager on or before 31 March 1990.

[C-4067]

## 31ஆம் நாள் நினைவு



திரு.

### வேதாரணியம் கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

தோற்றம்: 18-05-1916

மறைவு: 21-02-1990

வாழ்வு தந்து
நல்வழி காட்டி
தாழ்வுற்ற வேளைதனிலும் எமை
கலங்காமல் காத்திட்ட உங்கள்
ஆத்மா சாந்தி பெற இறைவனை இறைஞ்சுகிறோம்

அன்பகலாத
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'சிவபவனம்'
மட்டுவில் தெற்கு.
சாவகச்சேரி. [2930]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**
கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண்.

**பொருள்:**
வளைந்த புருவங்கள் கோணாமல் நேராக இருந்து மறைக்குமானால், இவளுடைய கண்கள் யான் நடுங்கும்படியான துன்பத்தைச் செய்யமாட்டா.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, தொலைபேசி: 2288
யாழ்ப்பாணம்.
23-03-1990 த. பெ: இலக்கம் : 25

# தேவை! அவசரத்திட்டம்!!

கடந்த கால வன்செயல்களினால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் —

- ★ 50 ஆயிரம் சிறார்களின் மனநிலை பாதிக்கப்பட்டிருக்கிறது
- ★ 35 ஆயிரம் சிறார்கள் தமது பாதுகாவலர்களை இழந்திருக்கிறார்கள்.
- ★ இராணுவ நடவடிக்கைகளினால் 25 ஆயிரம் விதவைகளும், சிறார்களும் தம் வீட்டு உழைப்பாளியை இழந்துள்ளனர்.
- ★ பயத்தால் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்த இளைஞர்கள் ஒரு லட்சம் பேர்.
- ★ கல்லூரிப் படிப்பை அரைவாசியில் விட்டவர்கள் 4 லட்சம் பேர்.

—எமது இளம் தலைமுறையின் — அடுத்த சந்ததியின் —அவல நிலை இது.

வடக்கு, கிழக்கு பாதிப்புகள் குறித்து புள்ளிவிவரங்களைத் திரட்டி வரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் திரு கே. சற்குணலிங்கம் இந்தத் திடுக்கிடும் புள்ளி விவரங்களை வெளியிட்டிருக்கிறார்.

கடந்த காலத்தில் பொருளாகவும், உடைமைகளாகவும் எமது சமுதாயத்துக்கு ஏற்பட்ட அழிவுகளை விட—

நமக்கு ஏற்பட்ட உயிரிழப்புகளை விட —

நாம் எதிர்நோக்கப் போகும் — பெரும் பாதிப்பை விளைவாகத் தரப்போகும் — இழப்பு எது என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் வெளிப்படுத்தியிருக்கின்றன.

உடைமைகளுக்கு ஏற்பட்ட அழிவு அந்தச் செல்வங்களை நாம் இழப்பதோடு போய்விடும்.

உயிரிழப்பு எமது சமுகத்திலிருந்து ஒரு பகுதி மக்களைப் பிரித்துவிட்டது.

ஆனால்—

இப்போது எமது இளம் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பும், அதன் விளைவுகளும் என்றும் எமது சமுகத்தின் மத்தியில் நின்று அதன் விருத்திக்கும், உயர்வுக்கும் தடைக்கல்லாக இருக்கப் போகிறது.

இழப்புகளிலிருந்து எமது மக்களுக்கு மீட்பளிப்பதற்காக புனர்வாழ்வுத் திட்டங்களும், நிவாரணக்கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அதுபோல—

இளம் சமுதாயத்தின் மனநிலையில், கல்வி முறையில ஏற்பட்ட பாதிப்புகளிலிருந்து அவர்களை மீட்க ஒரு நெறிமுறையான திட்டம் வகுக்கப்படவேண்டும்.

இது அவசியமும், அவசரமுமான தேவையாகும்!

# யாழ். நாவலர் மண்டபத்தில் விழா, கூட்டம் நடத்த அனுமதி

யாழ் மாவட்டத்தில் விழாக்கள், கூட்டங்கள் நடத்த நாவலர் மண்டபத்தை பாவிக்கலாம் என்று மாநகர சபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இலக்கியக் கூட்டங்கள், விழாக்கள் நடத்த மண்டப வசதியில்லை என்று புகார்கள் கூறப்பட்டு வந்தன.

இதைத் தொடர்ந்து யாழ் நாவலர் மண்டபத்தைத் திருத்தி கூட்டங்களை நடத்த இலவசமாக வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மண்டபம் தேவையானவர்கள் தொடர்பு கொண்டு அதைப் பெற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-3)

# என். ஆர். சின்னராசாவுக்கு காரைநகரில் பாராட்டு விழா

யாழ்ப்பாணம் மார்ச் 23 ஈழத்தின் பிரபல தவில் மேதை என். ஆர். சின்னராசாவுக்கு இன்று வெள்ளிக்கிழமை காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் மாலை நிகழ்ச்சியின் போது பாராட்டு விழா நடத்தப்படுகிறது.

இதில் அவருக்கு பொன்னாடை போர்த்தியும் பதக்கம் சூட்டியும் கௌரவம் அளிக்கப்படவிருக்கிறது.

இரவு 8.00 மணிக்கு நடைபெறும் இவ்விழாவை ஆலய நிர்வாகத்தினரும், காரைநகர் கம்பன் கழகத்தினரும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.

கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை, யாழ் பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர் க. நாகேஸ்வரன், காரைநகர் கம்பன் கழகத் தலைவர் திரு. ஏ. ஏகநாதன் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் ஆகியோர் பாராட்டுரை வழங்குவார்கள்.

புலவர் ஈழத்து சிவானந்தன் நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார்.

நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீல. ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி, செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, சிவ ஸ்ரீ மகா தேவக்குருக்கள் ஆகியோரின் ஆசி உரைகளும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவமகராஜா, கலாநிதி வித்துவான் க. ந. வேலன், என். கே. பத்மநாதன் ஆகியோரின் வாழ்த்துரைகளும் இடம்பெறும். (இ)

## சமய சந்நிதிகளில்

### மகோற்சவம்

பச்சிலைப்பள்ளி மார்ச் 23 ஈவினை ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலைய வருடாந்த மகோற்சவம் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெற்று எப்ரல் எட்டாம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறுமென ஆலய தர்மகர்த்தா பொ. தர்மலிங்கம் அறிவித்துள்ளார். (க-117)

### வசந்த நவராத்திரி விழா

யாழ்ப்பாணம் மார்ச்23 ஊர்காவற்றுறை- புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ அம்பாள் தேவஸ்தானத்தின் வசந்த நவராத்திரி விழா 27 ஆம் திகதிஅதிகாலை 6 மணிக்கு சண்டிகா ஹோமத்துடன் ஆரம்பமாகி ஏப்ரல் 3 ஆம் திகதி பூர்த்தியாகும். (க)

### மகோற்சவம்

சுன்னாகம் மார்ச்23 சுன்னாகம் ஐயனார் கோவில் வருடாந்த மகோற்சவம் 29 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வசந்த உற்சவம், 7 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழா, 8 ஆம் திகதி ஞாயிறு தீர்த்த உற்சவம் ஆகியன நடைபெறும். 11 ஆம் திகதி புதன் கிழமை அதிகாலை பொங்கலுடன் திருவிழா முடிவடையும். (க)

### மகாசபைக் கூட்டம்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 25 ஆம்திகதி (ஞாயிறு) காலை 9 மணிக்கு கோவில் மண்டபத்தில்கூட இருக்கிறது.

### விக்கிரகம் பெயர்க்கப்பட்டு ஐம்பொன் திருட்டு

மூலஸ்தான விநாயகர் விக்கிரகம் பெயர்க்கப்பட்டு அடியில் வைக்கப்பட்டிருந்த 60 ஆயிரம்ரூபா பெறுமதியான ஐம்பொன் மற்றும் பொறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் விநாயகர் சதுர்த்தி தினத்தன்று இரவு யாழ்-கலட்டி கற்பக விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது. (இ-51)

கடந்த கால வன்செயல்களின் போது

# வடக்கு-கிழக்கில் 7லட்சம் பேரின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்பு

## ஐ. நா அபிவிருத்தித் திட்ட அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம் மார்ச் 23 வடக்கிலும் கிழக்கிலும் ஏற்பட்ட கடந்த கால வன்முறைகளால் பொருளாதார ரீதியில் 7 லட்சத்துக்கு மேலானோர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் திட்ட இணைப்பாளார் கே. சற்குணலிங்கம் தொகுத்தளித்துள்ள புள்ளி விவரத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியில் மக்கள் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பகுதியினர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இந்தப் புள்ளிவிவரத் திரட்டுக் கூறுகின்றது.

விவசாயத்தில் 75 சத வீதத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர் இவர்களில் 50 சத வீதத்தினர் முழுதாகவும் 25 சத வீதத்தினர் அரைகுறையாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடித் தொலிழில்25 சத வீதத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10 சத வீதத்தினர் முழுதாகவும், 5சத வீதத்தினர் அரைகுறையாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொது, தனியார் துறை தொழிற்துறையிலும், வர்த்தகத்திலும் 10 சத வீதத்தினர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 5 சத வீதத்தினர் முழுதாகவும் 5சத வீதத்தினர் அரைகுறையாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு புள்ளிவிவரத் திரட்டுக் கூறுகின்றது. (க-3)

### 3 நாட்களில் ரூ 10லட்சம் நிவாரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 23 கடந்த திங்கட்கிழமை முதல் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் இயங்கும் விசேட கருமபீடம் மூலமாக 10லட்சம் ரூபா மீளக்குடியமர்தல் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது.

செயலக ஊழியர்களைக் கொண்டு இயங்கும் இப்பீடத்தின் ஊடாக இந்த மூன்று நாட்களிலும் வரணி, கச்சாய், கல்வயல் பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது.

## சர்வதேச மகளிர்தின விழா

யாழ்ப்பாணம், மார்ச் 23 யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபையின் மகளிர் குழு நடத்தும் சர்வதேச மகளிர்தின விழா நாளை 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் இடம் பெறும்.

இவ்விழா யாழ்ப்பாண மகளிர்குழு தலைவி திருமதி சகிதேவி கந்தையாவின் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்களாக வடகிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. வேலாயுதம்பிள்ளையும் பாரியாரும் கலந்து கொள்வார்கள்.

இவ்விழாவில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

# பாப்பரசர் பிரதிநிதி பங்குபற்றும் நிகழ்ச்சிகள்

குருநகர், மார்ச் 23 யாழ்வரும் பாப்பரசரின் பிரதிநிதி பேரருள் பிரான் சுவாபக்கே நாளை சனிக்கிழமை மாலை இளவாலைக்குச் சென்று பாடசாலை, மடம் போன்றவற்றை பார்வையிடுவதுடன் ஆலய ஆராதனை வழிபாடுகளிலும் கலந்து கொள்வார்.

25 - ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 - மணிக்கு யாழ் - குருமடத்திற்கு விஜயம் செய்யும் பிரதிநிதி அங்கு குருவுக்கு படிக்கும் மாணவர்களைச் சந்திப்பார்.

பிற்பகல் 3 - 30 மணிக்கு அங்கிருக்கும் தேவாலயத்தில் சிறப்புத் திருப்பலியை நிறைவேற்றுவார்.

26 - ஆம் திகதி காலை தோலகட்டி, வசாவிழான், அச்சுவேலிப் பகுதிகளுக்கு செல்வார். மாலை 4 மணிக்கு யாழ் - மறைவட்டக் குருக்களைச் சந்திப்பார்.

மாலை 5 - மணிக்கு யாழ் - மரியன்னை பேராலயத்தில் திருப்பலியை நடத்தி வைப்பார். இரவு 6 - மணிக்கு பேராலய வளவில் நடைபெறும் பொது வரவேற்பில் கலந்து கொள்வார். 27 - ஆம் திகதி செவ்வாய்கிழமை காலை 9 - மணிக்கு இங்கிருந்து புறப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க - 51)

## பஸ் நிலையத்தில் திருட்டு

கொழும்புத்துறை, மார்ச்23 யாழ். பஸ் நிலையத்தில் பஸ்ஸிற்காக காத்து நின்ற பெண்மணியின் பவுண்சங்கிலி பட்டப்பகலில் பறிபோனது. சித்துணிகரத் திருட்டுச் சம்பவம் யாழ். பஸ் நிலையத்தில் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நிகழ்ந்தது.

சுன்னாகத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் பஸ் நிலையத்தில் சுன்னாகம் பஸ்ஸிற்காகக்காத்த நின்ற போது பொலித்தீன்பையுடன் வந்த நபரொருவர் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டாராம்.

தனது நாலரைப்பவுண் சங்கிலியை இழந்த பிரஸ்தாப பெண்மணி அதிர்ச்சியடைந்தவராகக்காணப்பட்டார். (க-30)

### நினைவில் இன்று

23 - 3 - 1990

- ● வீரர் பகவத்சிங் நினைவு தினம்
- ● தீரர் சத்தியமூர்த்தி நினைவு தினம்

ஊர்காவற்றுறை - உடுவில் - கோப்பாய் - சாவகச்சேரி

# பதவி ஏற்ற கிராம சேவையாளர் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 23 யாழ் மாவட்டத்தில் புதிய கிராமசேவையாளர் பிரிவுகளில் கிராம சேவையாளர் பதவிகளை ஏற்றுள்ளனர்.

யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, நெடுந்தீவு, வேலணை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்த கிராமசேவையாளரின் விவரம் ஏற்கனவே உதயனில் வெளிவந்தது.

இன்றைய உதயனில் ஊர்காவற்றுறை, உடுவில் கோப்பாய், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் பதவி ஏற்றவர்களின் விவரம் வெளிவருகிறது.

### ஊர்காவற்றுறை

அனலைதீவு வடக்கு (J.37)- ரீ. சண்முகசுந்தரம், அனலைதீவு தெற்கு (J 38)- ஆர். சந்திரசேகரம், எழுவைதீவு (J.39)- எம். தர்மலிங்கம், காரைநகர் (J.40)- கே. குலசேகரம், காரைநகர் வடமேற்கு (J.41)- ரீ. சிறீஸ்கந்தராஜா, காரைநகர் கிழக்கு (J.42)- எஸ். கனகசபாபதி, காரைநகர் தென்கிழக்கு (J.43)- இன்னும் நியமிக்கப்படவில்லை, காரைநகர் தெற்கு (J.44)- ஆர். இராஜதுரை, காரைநகர் தென் மேற்கு (J.45)- ஐ. கே. நடேசன், காரைநகர் வடக்கு (J.46)- ஏ. கனகசபாபதி, காரைநகர் வடகிழக்கு (J.47)- எம். கே. கனகசபாபதி, காரைநகர் மத்தி (J.48)- எஸ். கே. சிவலிங்கம், ஊர்காவற்றுறை (J.49)- ஏ. சி. மனோகரன்.

பருத்தியடைப்பு (J.50)- கே. வசந்தகுமார், கரம்பொன் (J.51)- எம். கியூ. எம். டலிமா, கரம்பொன் கிழக்கு (J.52)- ஈ. சகாதேவன், கரம்பொன் தென்கிழக்கு (J 53)- எஸ். பாலச்சந்திரன், கரம்பொன் மேற்கு (J.54)- எம். தயானந்தன்.

நாரந்தனை வடக்கு (J.55)- ஏ. பீ. புண்ணியமூர்த்தி, நாரந்தனை வடமேற்கு (J.56)- இன்னும் நியமிக்கப்படவில்லை, நாரந்தனை (J.57)- இன்னும் நியமிக்கப்படவில்லை, நாரந்தனை தெற்கு (J.58)- ஏ. பதிநாதன், சுருவில் (J.59)- ரீ. இன்பலிங்கம், புளியங்கூடல் (J.60)- எம். விஜயரத்தினம்.

### உடுவில்

உடுவில் தென் மேற்கு (J.182)- பீ. தர்மரத்தினம், உடுவில் தென்கிழக்கு (J.183) கே. இரவீந்திரன், உடுவில் மத்தி (J.184)- இன்னும் நியமிக்கப்படவில்லை, உடுவில் மத்தி வடக்கு (J.185)- இன்னும் நியமிக்கப்படவில்லை, உடுவில் வடக்கு (J.186)- எஸ். ஆறுமுகம், சங்குவேலி (J.187)- வி. ஜெயரத்தினம்.

இணுவில் தென் மேற்கு (J.188)- எஸ். சுந்தரேஸ்வரன், இணுவில் கிழக்கு (J.189)- எஸ். சச்சிதானந்தன், இணுவில் வட கிழக்கு (J.190)- ரீ. புலேந்திரதாசன், இணுவில் மேற்கு (J.191)- ஜீ. சாந்தமோகன்.

தாவடி தெற்கு (J.192)- இன்னும் நியமிக்கப்படவில்லை, தாவடி கிழக்கு (J.193)- எஸ். தியாகராஜா,

(5ஆம் பக்கம் பார்க்க)

## நாணய மாற்று விகிதம்

21-3-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 233.79 | 234.76 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.50 | 4002.50 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6361.97 | 6393.44 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2330.29 | 2350.70 |
| 100 | [illegible] | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பானிய யென் | 25.7994 | 26.0815 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் திருமுகம்

### சுழிபுரம் கிழக்கு பஸ் சேவை

கடந்த கலவரங்களுக்கு முற்பட்ட காலத்தில் காரைநகர் இலங்கை போக்குவரத்து சபையாலும், யாழ்ப்பாணம், போக்குவரத்துச் சபையாலும் யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, மானிப்பாய், சங்கானை, சித்தன்கேணி ஊடாக வடலியடைப்பு, காலையடி, பணிப்புலம், சுழிபுரம் ஆகிய கிராமங்களுக்கு "சுழிபுரம் கிழக்கு" என்ற பெயர்ப் பலகையுடன் பேருந்து ஒன்றை சேவையில் ஈடுபடுத்தினார்கள். இதனால் மேற்குறிப்பிட்ட கிராம மக்கள் யாவரும் இலகுவான முறையில் யாழ்ப்பாண பிரயாணத்தை செய்யக் கூடியதாக இருந்தது.

அதனால் தற்போது ஏற்பட்டுள்ள சகஜ நிலைமையை தொடர்ந்து அச்சேவையை தொடருமாறு காலையடி மறுமலர்ச்சி மன்ற நிர்வாகிகளும் பணிப்புலம் சனசமூக நிலைய நிர்வாகிகளும் முயற்சி செய்தும் இதுவரை எத்தகைய பலனும் கிடைக்கவில்லை. இங்குள்ள கிராம மக்கள், குழந்தைகள் முதல் குடு குடு கிழவர் வரை எந்த வெய்யிலிலும் மழையிலும் 2.3 கிலோ மீற்றர் நடந்து வந்து பண்டத்தரிப்பில் பேருந்தை பிடிக்க வேண்டி இருக்கின்றது.

உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற் கொள்வார்களா?

த. தவராசா
பண்டத்தரிப்பு

### நகுலேஸ்வரி வீதி

அளவெட்டி நகுலேஸ்வரி றோட், கீரிமலைக்கு போகும் றோட் பலவருட காலமாக கவனிப்பார் அற்ற நிலையில் காணப்படுகின்றது. மழை காலங்களில் செல்ல முடியாதவாறு குன்றும் குழியுமாக காணப்படுகின்றது இதை கவனிக்க யாரும் இல்லையா?

பொ. சிவகுமார்
அளவெட்டி வடக்கு

### வீதி அதிகாரசபை கவனிக்குமா?

எமது வசிப்பிடமாகிய மானிப்பாய் தொடக்கம் இணுவில் வீதி வரையுமான பாதைகள் சிராக இல்லை மிகவும் குன்றும், குழியுமாக பாதிப்படைந்துள்ளது. கடந்த 12 வருடங்களாக வீதி திருத்தப்படவில்லை. வீதி அதிகாரசபை கவனம் செலுத்துமா?

மானியூர் மாணவர்

### பஜனை

கொழும்புத்துறையில் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா பஜனை மண்டபத்தில் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நாட்டில் சமாதானமும் ஒற்றுமையும் சாந்தியும் நிலவவேண்டிக்கடவுளைப் பிரார்த்திக்கும் அகண்ட நாம பஜனை ஒன்று இடம்பெறும். (க)

## கண்டதும் கேட்டதும்

கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்று விட வேண்டும் என்று உலகில் பலரும் முயற்சி செய்கிறார்கள். எதிலும் ஒரு சாதனையை நிலை நாட்டினால் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற்று புகழ் பெறலாம். சாப்பிடுவதிலும் சாதனை புரிந்து கின்னஸ் புததகத்தில் இடம் பெறலாம். சாப்பிடுவது இலகுவானது என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் மிளகாய்த்தூளைச் சாப்பிடுவது என்றால் எப்படியிருக்கும்? கோயம்புத்தூரைச் சேர்ந்த 30 வயதான பார்த்தசாரதி என்பவர் கோயம்புத்தூர் ரயில்வே நிலையத்துக்குமுன்னால்இருந்துபெருந் திரளானமக்கள் கூட்டத்தின்முன்னிலையில்50கிராம்மிளகாய்த்தூளைத் தின்று தீர்த்தார். இதே பார்த்தசாரதி 45 நாட்கள் பாம்புகளுடனும் கொடுக்கன்களுடனும் வாழ்ந்து புகழ் பெற்றவர். பாம்புராஜா என்று இவர் அழைக்கப்படுகிறார். இதுமட்டுமல்ல, பார்த்தசாரதி நிமிடங்களுக் குறைந்த நேரத்தில் 81 வாழைப்பழங்களையும் 4 நிமிடங்களில் 300 பாகற்காய்களையும் 5 நிமிடங்களில் நீருடன்கலந்தஒருகிலோகிராம்உப்பையும்12நிமிடங்களி ஒரு கிலோகிராம் சீனியையும் சாப்பிட்டிருக்கிறார்.

பார்த்தசாரதிகள் வரிசையில் இவரும் புகழ்ஏணியில்

— செய்திலோலன்

சுதந்திரப் பிரகடனத்தைத் தொடர்ந்து

# ஆயுதங்களை ஒப்படைக்கும் படி லித்து ஏனியருக்கு ரஷ்யா உத்தரவு!

## நெருக்கடி மோசமடைவது குறித்து அமெரிக்கா கவலை

மாஸ்கோ, மார்ச் 22
சகல ஆயுதங்களையும் ஒப்படைக்கும்படி லித்து ஏனிய மாநில மக்களை சோவியத் யூனியன் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் எச்சரித்துள்ளார்.

ஆயுதங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று சோவியத் அரசு லித்து ஏனியர்களுக்கு கூறியுள்ளது.

அண்மையில் சுதந்திர பிரகடனத்தை லித்து ஏனியா நாடாளுமன்றம் அறிவித்தது தெரிந்ததே.

அப்பிரகடனம் சட்ட விரோதமானது, செல்லாதது என்று சோவியத் நாடாளுமன்றம் ஆணை பிறப்பித்தது.

அதனைத் தொடர்ந்து சோவியத் மத்திய அரசுக்கும் லித்துஏனிய மாநில அரசுக்கும் இடையே நெருக்கடி ஏற்பட்டது.

அந்த நெருக்கடி நிலை இப்போது உச்சக்கட்டம் அடைந்துள்ளது.

ஆயுதங்களை ஒப்படைக்கும்படி ஜனாதிபதி கோர்பச்சேவ் உத்தரவிட்டிருப்பதை லித்துஏனிய அதிபர் பேர்கிஸ் கண்டித்துள்ளார்.

லித்துஏனியாவுடன் வெளிநாட்டவர் தொடர்பு வைத்துக் கொள்வதைத் தடுக்கும் படியும் லித்து ஏனியர்களுக்கு விசா வழங்குவதை கடுமையாக்கும்படியும் அதிபர் கோர்பச்சேவ் உள்துறை, வெளியுறவு அமைச்சுக்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இதே வேளை—
மோசமடைந்துவரும் லித்து ஏனிய நெருக்கடி குறித்து அமெரிக்க அரசு நேற்று தனது கவலையைத் தெரிவித்தது. (எ)

## அகதிகள் வெளியேற்றம்

வியட்னாம் அகதிகள் என்ற போர்வையில் ஜப்பானுக்குள் நுழைந்த 491 சீனப்பிரசைகளை டோக்கியோ அரசு வெளியேற்றிவிட்டது.

நாகசாகி நகரில் இச்சீன அகதிகள் தங்கியிருந்தனர். [எ]

அமெரிக்காவைக் கண்டு பிடித்த

## கொலம்பஸின் கடிதம் 150 மொழிகளில் பிரசுரம்

மாட்ரிட், மார்ச் 22
அமெரிக்காவைக் கண்டு பிடித்த தகவலை வெளியிட்ட கிறிஸ்தோபர் கொலம்பஸின் கடிதத்தை 150 மொழிகளில் மொழிபெயர்க்க ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த அமைப்பு ஒன்று நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஸ்பானிஷ் மொழியில் இக்கடிதத்தை கொலம்பஸ் 1492 ஆம் ஆண்டில் தனது ஸ்பானிஷ் நண்பர் ஒருவருக்கு எழுதினார்.

''ஐயா எனது பயணத்துக்கான வெற்றியை ஆண்டவன் தந்து விட்டார்''— இப்படி கொலம்பஸ் கனறி தீவுக்குச் சென்று கொண்டிருக்கையில் கடிதத்தை எழுதி அனுப்பி வைத்தார்.

இந்த இரண்டு பக்கக் கடிதத்தின்மூலப்பிரதிநியூயோர்க் பொது நூலகத்தில் வைக்கப் பட்டுள்ளது. [எ]

## அழைப்பு

ஜெருசலம் மார்ச் 22
புதிய அரசுஒன்றை அமைக்கும்படி தொழிற் கட்சியை இஸ்ரவேல் ஜனாதிபதி ஹெர்ஸோக் முறைப்படி அழைத்திருக்கிறார். (எ)

## குழந்தைகள் நலன் பற்றிய உச்சிமாநாடு

ஐநா, மார்ச் 22
குழந்தைகள் பற்றிய உலக உச்சி மாநாடு வருகிற செப்டம்பர் மாதம் 29, 30, ஆம் திகதிகளில் ஐநாசெயலகத்தில் நடைபெறவிருக்கின்றது.

கனடாவும் பாகிஸ்தானும் இணைந்து இந்த உச்சி மாநாட்டை நடத்துகின்றன. (எ)

## இந்தியப் படையினர் காஷ்மீரில் தேடுதல்

ஸ்ரீநகர், மார்ச் 22
காஷ்மீரில் பிரிவினை கோரும் தீவிரவாதிகளின் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி இந்தியப் படையினர் பணிக்கப்பட்டிருக்கின்றனர்.

அரசு அதிகாரிகள் மூவர் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தீவிரவாதிகளை தேடிக்கண்டுபிடிக்கும் பணியில் இந்தியப்படையினர் பெரிய அளவில் ஈடுபட்டு உள்ளனர்.

தனிநாடு கோரிக்கைக்கு எதிரானவர்கள் என்று கருதப்படும் அரசு உயர்அதிகாரிகளின் பெயர்ப்பட்டியல் ஒன்றை தீவிரவாதிகள் வைத்துள்ளனர் என்று புலனாய்வுத்துறையினர் கூறுகின்றனர்.

அந்த அரசு அதிகாரிகளுக்கு தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

''காஷ்மீரை விட்டு வெளியேற வேண்டும்; இல்லையேல் சுட்டுக்கொல்லப்படுவீர்கள்''— என்று தீவிரவாதிகள் எச்சரிக்கையில் தெரிவித்துள்ளனர்

இதே வேளை ஸ்ரீநகரில் காலவரையறையற்ற ஊரடங்கு சட்டத்தை அரசு பிறப்பித்து உள்ளது. (எ)

## சிகிச்சை பெற அமெரிக்கா செல்கிறார் ஜெயலலிதா!

சென்னை, மார்ச் 22
அதிமுகபொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வைத்திய சிகிச்சைக்காக அமெரிக்கா செல்ல முடிவு செய்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற கார் விபத்தில் ஜெயலலிதாவின் முள்ளந்தண்டில் முறிவு ஏற்பட்டது தெரிந்தது. அதற்கும் அவருக்கு ஏற்கனவே உள்ள கர்ப்பசம்பந்தமான நோய்க்கும் சேர்த்து அமெரிக்காவில் வைத்திய சிகிச்சை பெறுவதற்கான ஏற்பாடுகளை அதிமுக செய்துவருகிறது.

ஜெயலலிதா அமெரிக்காவில் தங்கி இருக்கும் சமயம் அதிமுக கூட்டுத்தலைமை ஒன்றின் கீழ் இயங்கும் என்று அதிமுக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ)

## பொதுக்கரன்ஸி

பொன், மார்ச் 22
கிழக்கு ஜேர்மனியுடன் பொது கரன்ஸி உடன்பாடு ஒன்று எதிர்வரும் ஜூலை மாதத்திற்கு முன்னர் காணப்படும் வாய்ப்பு இருப்பதாக மேற்கு ஜேர்மன் அரசு அறிவித்திருக்கிறது. (எ)

## பிரிட்டனில்விலை உயர்வு

லண்டன், மார்ச் 22
பிரிட்டனில் சிகரெட், மது, எரிபொருள் ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த செவ்வாய்க்கிழமை நடாளுமன்றத்தில் நிதி அமைச்சர் ஜோன் மேஜர் சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தில் இவ்விலை அதிகரிப்பு அறிவிக்கபபட்டது. (எ)

## தென். ஆபிரிக்க - சோவியத் தலைவர்கள் பேச்சு வார்த்தை

வின்டொக், மார்ச் 22
தென் ஆபிரிக்க ஜனாதிபதி எப். டி. கிளேர்க் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்நாட்சேடன் தொண்ணூறு நிமிடங்கள் வரை பேச்சுக்கள் நடத்தினார்.

ஆபிரிக்க அரசியலில் இது ஒரு முக்கிய பேச்சுவார்த்தை என்று வர்ணிக்கப்பட்டது

நிறவேற்றுமையைக் கண்டிக்குமுகமாக சோவியத் யூனியன் தென் ஆபிரிக்காவுடன் ராஜதந்திரத் தொடர்பு வைக்கவில்லை. (எ)

## அசுத்தமான நகரம் புதுடில்லி

புதுடில்லி, மார்ச் 22
உலகிலேயே மிக அசுத்தம் என்று கணிக்கப்பட்ட மூன்று நகரங்களில் ஒன்று இந்தியாவின் தலைநகரமான புதுடில்லி என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. (எ)

## பதவி விலகல்

பீகிங் மார்ச் 22
சீனப் பெருந்தலைவர் டெங்ஷியாஓபிங் ராணுவ ஆணைக்குழுத்தலைவர் பதவியில் இருந்து விலகினார். (எ)


# எமது அதிநவீன இயந்திரங்கள் இப்பொழுதும் பத்து விரல்களைக் கொண்டவை



சிங்கருக்கு, அதன் மிகப்பெறுமதி வாய்ந்த வளம், அதன் மக்களேயாகும்.

தொழிற்துறைக்கூடாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்வதற்கென்றே சிங்கர், தன்னை அர்ப்பணித்திருந்த போதிலும், அதன் முழு நலமும், சாதனைகளும், தொழிற்துறைகளுக்குப் பின்னால் உள்ள எண்ணங்களின் தரத்தை உயர்த்துவதற்காகவே இருந்து வருகிறது. இதன் விளைவாகவே, கடந்த 113 வருட அதன் வரலாற்றில், வளங்களில் எல்லாம், முக்கியமான, மானிட வளத்தை அபிவிருத்தி செய்வதிலும், பேணுவதற்குமே அது சேவையாற்றி வந்திருக்கிறது.

சிங்கர் ஸ்தாபனம் காட்டும் ஆர்வமும் பொறுப்பும் இந்த நாட்டின் புதல்வர்களுக்கு அதிகரித்த வேலைவாய்ப்புகளை வழங்குவதில் மட்டுமல்ல, தொழிலின் தரத்தை அபிவிருத்தி செய்வதிலும், அதி நவீனமாக்குவதிலும் வெளிப்படுத்தப்படுகிறது.

அதனால் தொழிற்துறையில் ஏற்படும் ஒவ்வொரு வளர்ச்சியிலும் அவைகளை உருவாக்கும் அத்தனை உள்ளங்களும், மேலும் மேலும் பல இலக்குகளை அடையக்கூடியதாக இருக்கும். அதேவேளையில் எல்லோரின் நலனுக்கான, மேன்மையான முன்னோக்கு பார்வையைக் கடைப்பிடிக்கவும் இது உதவுகிறது

சிங்கர்

–அதிசிறந்த வாழ்க்கைத்தரத்துக்கு பங்களிக்கிறது

ZENITH


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தவில் மேதை சின்னராசாவுக்கு பாராட்டு விழா

(23 - 03 - 1990)



தவில் மேதை சின்னராசா

கடந்த மூன்று ஆண்டுகளாக தென்னக இசை உலகில் புகழ்க் கொடி நாட்டி நாடு திரும்பிய

ஈழத்தின் பிரபல தவில் மேதை என். ஆர். சின்னராசா அவர்களுக்கு

இன்று வெள்ளிக்கிழமை மாலை 8.00 மணிக்கு காரைநகர் வியாவில் ஐயனார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவின் மாலை நிகழ்ச்சியின் போது பாராட்டு விழா நடைபெறும்.

ஏற்பாடு:

**ஆலய நிர்வாகத்தினரும், காரைநகர் கம்பன் கழகத்தினரும்**

விழாவில் தவில் மேதை என். ஆர். சின்னராசா அவர்கள் பொன்னாடை போர்த்து பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்படுவார்.

(சி-4079)

## அதிஷ்டலாபச்சீட்டு

யாழ். குடாநாட்டில் விற்பனையாகவுள்ள பெறுமதியான பரிசுகள் வழங்கும் அதிஷ்டலாபச் சீட்டுக்களை விற்பனை செய்வதற்கு விநியோகஸ்தர்கள் தேவை. அத்துடன் காசாளர் ஒருவரும், உதவி வேலையாட்களும் தேவை. உடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.


**யூறோப் சைனா ஹோட்டல்**

89. 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(2941)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

[23—03—1990]



**நடராசா - யோகராசா**

அன்னை மடியில்: 05 - 11 - 1956
ஆண்டவன் அடியில்: 28 - 03 - 1984

எங்கள் அருமை யோகம்!

நீர் இவ்வுலகை விட்டுப்பிரிந்து ஆறு ஆண்டுகள் ஆனாலும் எங்கள் உள்ளங்களிலே அணையாத தீபமாய் என்றும் வாழ்கிறாய்.

உமது ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

● அம்மா, அக்காமார், அண்ணன்மார், அத்தான்மார், அண்ணி, மருமக்கள், மகன்மார், உறவினர்கள், நண்பர்கள்.

கே. கே. எஸ். றோட்,
மல்லாகம்.

[2939]

# ஆசிரியருக்கு நிரந்தர நியமனம்
# கல்வி ஆணைக் குழு நடவடிக்கை

கொழும்பு மார்ச் 23

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் சகல பாடசாலைகளிலும் நிரந்தர நியமனம் இன்றி கற்பித்துவரும் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்க கல்விச் சேவை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்தகைய ஆசிரியர்களுக்கு பயிற்சி ஆசிரியர் நியமனங்களை வழங்கவுள்ளதாக கல்விச் சேவை ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திரு. எஸ். ஏ. பிரேமரத்தினா உதயனுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில் கூறியதாவது:

தற்போது நாடு முழுவதுமுள்ள பாடசாலைகளில் சுமார் 8 ஆயிரம் ஆசிரியர்கள் அரச நிரந்தர நியமனம் இன்றி பாடசாலை அபிவிருத்தி சபைகளின் சிறு சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு கடமையாற்றி வருகின்றனர்.

கல்வி அமைச்சின் தீர்மானத்துக்குஇணங்ககடந்த மாதம் 26ஆம் திகதி இதற்கான விண்ணப்பங்களை அரச வர்த்தமானி மூலம் கோரியிருக்கிறோம்.

ஆணைக்குழுவின் முடிவுகளுக்கு இணங்க தகுதிகளை பெற்றிருக்கும் சகல இத்தகைய ஆசிரியர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் கிடைத்தவுடன் நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் மாவட்ட இயக்குனரூடாக அனுப்பப்பட வேண்டும். இப்படி அவர் கூறினார்.

(இ-2)

## பதவி ஏற்ற கிராமசேவை- - -

தாவடி வடக்கு (J 194)-என். தேவநேரு.

சுன்னாசம் நகர் வடக்கு (J.195)- இன்னும் நியமிக்கப்படவில்லை, சுன்னாகம் நகர் தெற்கு (J.196)- கே. வேலும்மயிலும், சுன்னாகம் நகர் கிழக்கு (J 197) - எம். இராமலிங்கம், சுன்னாகம் நகர் மத்தி (J.198)- இன்னும் நியமிக்கப்படவில்லை, சுன்னாகம் நகர் மேற்கு (J.199)- இன்னும் நியமிக்கப்படவில்லை, சந்தரோடை (J.200)- கே. சந்திரவர்ணன், ஏழாலை மேற்கு (J.201)- எஸ். சக்திகிரீவன், ஏழாலை தென்மேற்கு (J.202)- இன்னும் நியமிக்கப்படவில்லை, ஏழாலை தெற்கு (J.203)- எஸ். இரவீந்திரன், ஏழாலை கிழக்கு (J.204)- இன்னும் நியமிக்கப்படவில்லை, ஏழாலை வடக்கு (J,205)- இன்னும் நியமிக்கப்படவில்லை, ஏழாலை மத்தி (J,206)- வி. நடராஜா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு (J 207) இன்னும் நியமிக்கப்படவில்லை, புன்னாலைக் கட்டுவன் வடக்கு (J 208)- எஸ். சிவதாசன், ஈவினை (J.209)- எஸ். பரமநாதன், குப்பிளான் தெற்கு (J.210)- எம். சபாநாதன், குப்பிளான் வடக்கு (J 211)- எஸ். ஞானசபேசன்.

### கோப்பாய்

இருபாலை தெற்கு (J.257) -ஈ. சின்னத்துரை, இருபாலை கிழக்கு (J.258)-எஸ். தவரத்தினம், கல்வியங்காடு (J.259)-எஸ். ஜெ. செல்லத்துரை, கோப்பாய் தெற்கு (J.260)-எஸ். முத்துக்குமாரசாமி, கோப்பாய் மத்தி (J-261)-ரீ. தனபாலசிங்கம், கோப்பாய் வடக்கு (J.262)-செல்வச்சந்திரன்,

உரும்பிராய் மேற்கு (J 263) ஏ. கணேசு, உரும்பிராய் வடக்கு (J.264) வி. ஜெயதாஸ், உரும்பிராய் தெற்கு (J.265)-இன்னும் நியமிக்கப்படவில்லை, உரும்பராய் கிழக்கு (J.266 )- ஏ. சி. ரீ. கிருஷ்ணராஜா, ஊரெழு (J.267) - வி. சின்னத்துரை, நீர்வேலி தெற்கு (J.268)-திருமதி பீ. சிறீரங்கநாதன், நீர்வேலி வடக்கு (J.269)-எஸ். தனராஜா, நீர்வேலி மேற்கு (J.270) ரீ. பாலசிங்கம், சிறுபிட்டி கிழக்கு (J.271)-எஸ். சிவரத்தினம், சிறுபிட்டி மேற்கு (J.272) கே. சிறீஸ்கந்தராஜா, புத்தூர் மேற்கு (J.273)- பீ. என். செல்லத்துரை, புத்தூர் வடக்கு (J274)- கே நாகேந்திரன், நவக்கிரி (J.275)-கே. கிருஷ்ணர், ஆவரங்கால் கிழக்கு(J 276)- ஏ. சி துரைசிங்கம், ஆவரங்கால் மேற்கு (J.277)-கே. துரைராஜா, புத்தூர் கிழக்கு (J.278)-கே. வைத்தியநாதன். அச்செழு (J.279)-எஸ். விக்னேஸ்வரன், வாதரவத்தை(J.280)-பீ. சண்முகவடிவேல், பத்தைமேனி (J.281) கே. கதிரமலைநாதன், தம்பாலை-கதிரிப்பாய்(J.282) ஏ. கனகசிங்கம், இடைக்காடு (J.283)-ஆர். யோகராஜா, வளலாய் (J.284)பீ. சாந்தரூபன், அச்சுவேலி வடக்கு (J.285)-ஏ. குலேந்திரநாயகம், அச்சுவேலி தெற்கு (J.286) - பீ. கணேசலிங்கம், அச்சுவேலி மேற்கு (J.287)-என். மதனசேகர்.

### சாவகச்சேரி

கைதடி வடக்கு (J.288)-எ. புவிகாந்தன், கைதடி கிழக்கு (J.289) - என். கதிர்காமநாதன், கைதடி மத்தி (J.290)-பீ. செல்லையா, கைதடி தெற்கு (J.291)-இன்னும் நியமிக்கப்படவில்லை, கைதடி தென்கிழக்கு (J.292) R. அம்பலவாணர். கைதடி மேற்கு (J.293) - கே. ஜே. இரத்தினராஜா, நாவற்குழி மேற்கு (J.294) ஏ. நடராஜா, நாவற்குழி கிழக்கு (J 295) - வி. சிவசுப்பிரமணியம்,

கோவிலாக்கண்டி (J.296)- கே. சிறீவிக்னேஸ்வரமூர்த்தி, கைதடி-நாவற்குழி (J.297)- ஈ. சபாநாதன், மறவன்புலோ (J.298)ரீ. மகாலிங்கம்; தனங்கிளப்பு [J.299)-எஸ். பாலசிங்கம், சாவகச்சேரி நகரம் (J.300)-ரீ. இரத்தினராஜா, கோவில்குடியிருப்பு [J.301]-கே. செல்வராஜா, சங்கத்தானை [J 302)- வி. குமாரசாமி, சாவகச்சேரி வடக்கு [J.303]-எஸ். யோகராஜா.

மந்துவில் [J,304]-இன்னும் நியமிக்கப்படவில்லை, கல்வயல் [J.305]-வி. இராஜரத்தினம், நுணாவில் கிழக்கு [J,309]- வி. துரைசிங்கம், நுணாவில் மத்தி [J.307] வி- கதிர்காமநாதன், நுணாவில் மேற்கு [J.308] வி. எஸ். துரைராஜா, கைதடி, நுணாவில் [J.309] எஸ். செல்வராஜா, தென்மட்டுவில்- [J 310]-வி. கந்தையா, மட்டுவில்-நுணாவில் [J.311]-வி. துரைசிங்கம், மட்டுவில் மத்தி[J312]-பீ. திருநாவுக்கரசு, மட்டுவில் வடக்கு [J.313]-ஏ.ரீ. அருணாசலம், மட்டுவில் கிழக்கு [J.314]- எஸ். கந்தசாமி, சந்திரபுரம் [J.315]- கே. சுந்தரராஜா. சரசாலை தெற்கு [J.316]- ஆர். சிவானந்தன், சரசாலை வடக்கு [J.317]-செல்வி எஸ். ஐயாத்துரை, மீசாலை கிழக்கு [J.318] - என். பரமசிவம், மீசாலை மேற்கு [J 319] - கே. வேலாயுதபிள்ளை இராமவில் [J.320] கே. சின்னையா, மீசாலை வடக்கு [J 321]- ரீ. எஸ், கந்தசாமி, அல்லாரை [J 322]-கே. வேலாயுதபிள்ளை, வேலம் போக்கடி (J 323) - பீ. லோகேந்திரன், கச்சாய் [J.324]- ஆர். அற்புதஜெயன், பாலாவி [J.325]-பீ. ஏ. அலோசியஸ்,

கொடிகாமம் வடக்கு [J326]-எஸ். தங்கமயிலோன், கொடிகாமம் மத்தி [J 327]- திருமதி கே. சிவசுப்பிரமணியம், கொடிகாமம் தெற்கு [J.328] - எஸ். குணபாலசிங்கம், உசன் [J 529] - கே. குமாரசாமி, சரம்பகம் (J.330) -திருமதி எம். பரமேஸ்வரி, விடத்தற்பளை (J 331)-கே. நடராஜமூர்த்தி, கெற்பெலி (J332)-எஸ். சிவகுரு, எழுதுமட்டுவாள் தெற்கு (J333)- எஸ். இரத்தினசிங்கம், எழுதுமட்டுவாள் வடக்கு (J.334)- பீ. நவரத்தினராஜா, மிருசுவில் வடக்கு [J.335] வி. கருணானந்தன், மிருசுவில் தெற்கு (J 336) - ரீ. டபிள்யூ. இரத்தினசிங்கம், குடமியன் [J.337] எஸ். குலைச்செல்வம், நாவற்காடு (J.338) -வி. நாகதேவன், வரணி வடக்கு (J 339)-ரீ. செல்வரத்தினம், மசேரி (J.340)- எஸ். சச்சிதானந்தன், இடைக்குறிச்சி (J.341)-என். இராஜகுமாரன், கும்பைக் [illegible] மனோகரன், வரணி இயற்றாலை(J.343)-எஸ் கணேஸ், தாவளை இயற்றாலை (J.344)-எஸ். இந்திரராஜா, மந்துவில் கிழக்கு [J.345]- ஏ. சதாசிவம், மந்துவில்மேற்கு [J 346] - எம். நாகேஸ்வரன், மந்துவில் வடக்கு[J.347] - பீ. பொன்னுத்துரை.

[தொடரும்]

(இ-ச)

### மாநகர ஆணையாளருக்கு பாராட்டு

கொழும்புத்துறை, மார்ச்21

பாஷையூர் பகுதியில் சீரான நீர் விநியோகம் சம்பந்தமாக உடன் நடவடிக்கை மேற்கொண்டமைக்காக பாஷையூர் மக்கள் முன்னேற்றச்சங்கச்சனசமூக நிலையம், யாழ். மாநகர ஆணையாளருக்குப்பாராட்டியும்நன்றியும் தெரிவித்துத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

பாராட்டுக்கடிதமொன்றை சனசமூக நிலையச் செயலாளர் திரு. ஆ. மாட்டின் ஆசிரியர் யாழ், மாநகர சபை ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். (க-30)


'ஷப்றா' ஆதரவுடன்

நல்லை ஆதீனம் நடத்தும்

**தேவார மனனப் போட்டி**

நல்லை ஆதீனம் ஏப்ரல் 21 ஆம், 22ஆம் திகதிகளில் நடக்கவிருக்கும் 10 பதிகங்களில் மனனப் போட்டிக்குரிய

விண்ணப்ப முடிவுத் திகதி: 1 - 4 - 90

18 வயதிற்கு உட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். மனனம்செய்து ஒப்புவிப்போர் எல்லோருக்கும் ஷப்றா ஆதரவில் பரிசில்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு நல்லை ஆதீனத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். (சி-4134)

**ENGINEERING COURSES**
**LONDON ECE PART - I**

சர்வதேச அங்கீகாரமுடைய

லண்டன் என்ஜினியரிங் கவுன்சில் April 1991 பரீட்சைக்குரிய பாட நெறிகள்

**Marconi Institute of Technology**

நிறுவனத்தால் April 1990 தொடக்கம் கற்பிக்கப்படும்.

**G. C. E. A/L**

பரீட்சையில் பௌதீக விஞ்ஞான பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்க விரும்பினால்,

பிரதம விரிவுரையாளர்

திரு. எஸ். கனகசபை, M. Sc. (B'ham)
B. Sc. Eng. (Lond), B. Sc. (Cey),
P. Eng (APEO, Canada), M.I.E.E.E. (U.S.A)

அவர்களை நேரில் சந்திக்கவும்

இடம்:

*Bond Institutes*

58 - A, Stanley Road, Jaffna.

நேரம்:

1990 March 24ம் [சனி],
25ம் [ஞாயிறு] திகதிகளில்
காலை 8.30 — மாலை 4.30
மணிக்கிடையில்

MIT, MATHAGAL.

[2944]


உ

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் சுக்கில பங்குனி மாதம் 12 ஆம் நாள் (25 - 03 - 1990)ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12-00 மணிமுதல் 3-00 மணி வரையுமுள்ள சுப முகூர்த்த வேளையில்

| எனது புத்திரன் | | எனது புத்திரி |
|---|---|---|
| **மகேந்திரன்** | ★★★★ | **தேவகி** |
| அவர்களுக்கும் | | அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு கனடா - றிச்மன்ட்கில் பிள்ளையார் கோவில் திருமண மண்டபத்தில் திருமாங்கல்ய வைபவம் நடைபெற நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்:

திருமதி சி. மார்க்கண்டு,
அல்லைப்பிட்டி கிழக்கு, அல்லைப்பிட்டி,
இலங்கை.
60. DOLLYVARDEN BLVD,
SCARBOROUGH,
ONT. M1H 2K4

திரு. சி. ஆறுமுகம்,
ஸ்ரேசன் வீதி, வவுனியா,
இலங்கை.
250, ORTON PARK, UNIT — 9
SCARBOROUGH
ONT. M1G 3H4

(2914)


**T. V. Travels & Tours**

உடனடி வேலைவாய்ப்பு

**Kuwait - குவைத்**

1. Drivers - சாரதிகள் 2. Cleaners - சுத்திகரிப்பாளர்கள்

மேற்காணும் பதவிகளுக்கு ஆட்கள் உடன் தேவைப்படுவதால் உடன் எமது காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்

★ நோர்வே ★ சுவிஸ் ★ டென்மார்க்
★ சுவீடன் ★ கொலன்ட் ஆகிய

நாடுகளுக்கு செல்ல விரும்புவோர்களுக்கு நான்கு வாரத்தில் பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

Front of Railway Station,
Brown Road, Kokuvil.

[சி-4130]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷப்றா அணி வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 23 தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் அணியுடனான சினேகபூர்வமான மட்டுப் படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக் கெட் போட்டியில் ஷப்றா அணி 83 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

முதலில்ஆடிய ஷப்றா அணி 158 ஓட்டங்களைப் பெற்றது. வித்தியா தரன் 28, விஜய குமார் 26, ஜயந்தன் 18, வீரசிங்கம் 17, முருகவேல் 15 றொணி 14, பத்மஜெயந் 13, தயாளன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களைப் பெற்ற னர். செல்வராஜா 31 ஓட்டங் களுக்கு 6 விக்கட்டுகளையும், கிருபா 21 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும், பொன் விலியஸ் 53 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் கைப்பற் றினர்.

தொடர்ந்து ஆடியகிறாஸ் கொப்பேர்ஸ் அணி 75 ஓட் டங்களைப் பெற்றது. கிருபா 27, றொகான் 14 ஓட்டங் களைப்பெற்றனர் இளங்கோ 16 ஓட்டங்களுக்கு 5விக்கட் டுகளையும் தயாளன், ஜெயந்தன்இருவரும்முறையே 12, 15 ஓட்டங்களுக்கு தலா 2விக்கட்டுக்களையும். றொனி 12 ஓட்டங்களுக்கு 1 விக்கட் டையும் கைப்பற்றினர். (மு)

# இன்றும் நாளையும் நடைபெறும் வடக்கின் பெரும் கிரிக்கெட்போட்டி

### சென்றல்- சென்ஜோன்ஸ் மோதுகின்றன

யாழ்ப்பாணம் மார்ச் 23

யாழ் மத்திய கல்லூரிக்கும் சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையில் நடைபெறும் வடக் கின்பெரும்கிரிக்கெட்போட்டி இன்றும் நாளையும் நடை பெறவிருக்கிறது.

யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இருநாட்க ளும் காலை 9.30 க்கு ஆரம்பமாகவிருக்கும். இப் போட்டி 87 வது தடவையாக நிகழவிருக்கிறது. கடந்த 5 வருடங்களாக நடைபெறாது இருந்த இப் போட்டிக்கு இம் முறை பெருந்திரளான ரசிகர் கள்வருவார்களெனஎதிர்பார் க்கப்படுகிறது. இரு கல்லூரிக ளினதும் மாணவர்களும் ஆத ரவாளர்களும் கடந்த ஒரு வாரகாலமாக தத்தமது கல் லூரிக்கொடிகளைஏந்தியவண் ணம்யாழ்நகரத் தெருக்களில் கோஷமிட்டவாறு சைக்கிள் களில் சென்று யாழ்நகரத் தையே அமர்க்களப்படுத்தி விட்டனர்.

இக் கோலாகலச் சூழ்நிலை யில் இன்று காலை ஆரம்ப மாகவிருக்கும் இப் பெரும் போட்டியில் முருந்தன் தலை மையில் மத்திய கல்லூரி அணி யும் சதீசன் தலைமையில்சென் ஜோன்ஸ்அணியும் மோதும். யாழ் மத்திய கல்லூரியின் அணிக்கும் சென்ஜோன்ஸ் கல் லூரி அணிக்கும் முறையே வடக்கில் அனுபவமும் பிரபல மும் நிறைந்த கிரிக்கெட் வீரர் களான சாந்தி சரனும், சூரிய குமாரும், பயிற்சி அளித்துள் ளார்கள். இவ் வருடம் நடை பெற்ற போட்டிகள் எதிலும் தோல்வியடையாத சென் ஜோன்ஸ் அணியுடன் சென் றல் அணிமோதவிருக்கும் இப் போட்டிகிரிக்கெட் ரசிகர்க ளுக்கு பெரு விருந்தாக அமை யுமென்று எதிர்பார்க்கப்படு கிறது இப் போட்டிக்கு திரு வாளர்கள் செல்வராஜாவும் சிறீதரனும் மத்தியஸ்தர்க ளாக கடமையாற்றுவர்.

'' பட்டில் ஒவ் த நோத் '' என்று சொல்லப்படும் இப் பெரும் போட்டியானது 1904 ஆம் ஆண்டு முதல் விளையா டப்பட்டு வருகிறது. இப் போட்டிகள் ஆரம்பத்தில் வருடத்தில் இரு தடவைகள் நடைபெற்றதும் உண்டு.

1948, 1985, 1986, 1987, 1988, 1989, ஆம் ஆண்டுகளில் போட்டி நடக்கவில்லை. இப் போட்டிகளில் 31 தடவைகள் சென்ஜோன்சும், 20 தடவை கள் சென்ரலும்வெற்றி பெற் றுள்ளன, கடைசியாக 1970ல் நடைபெற்ற போட்டியில் சென்ரல் வெற்றி பெற்றது. அதன்பின் நடைபெற்ற போட்டிகள் யாவும் வெற்றி தோல்வியின்றியே முடிவடை ந்தன. (இ-மு)

### வடமராட்சி மெய்வல்லுநர் போட்டி

பருத்தித்துறை, மார்ச் 23

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பிரிவின் மெய்வல்லு நர் போட்டி 24 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நெல் லியடி மத்திய மகாவித்தி யாலய மைதானத்தில் கல்வி அதிகாரி திரு. எஸ்.செல்லத் துரை தலைமையில் நடை பெறும். இப்போட்டியில் பிரதம விருந்தினராக வட மராட்சி கோட்டை உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (க-118)

### வட்டு. கொத்தணி உடற்பயிற்சி போட்டி முடிவுகள்

வட்டுக்கோட்டை, மார்ச் 23

வட்டுக்கோட்டைக் கொத் தணிப் பாடசாலைகள் அமை ப்பு உடற்பயிற்சிப்போட்டி வட்டு இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. முதலிடம் பெற்ற பாடசாலைகளின் விபரம் பின்வருமாறு.

13 வயதுக்குட்பட்ட பெண் கள் – வட்டு இந்துக்கல்லூரி, 13 வயதுக்குட்பட்ட ஆண்கள் – அராலி சரஸ்வதி, ம.வி., 17 வயதுக்குட்பட்ட பெண் கள் – அராலி இந்துக்கல்லூரி, 17 வயதுக்குட்பட்ட ஆண் கள் – அராலி இந்துக் கல் லூரி, 19 வயதுக்குட்பட்ட பெண்கள் – வட்டு இந்துக் கல்லூரி, 19வயதுக்குட்பட்ட ஆண்கள் – அராலி இந்துக் கல்லூரி,

அராலி இந்துக் கல்லூரி மூன்று குழுக்களில் முதலிடம் பெற்றமைகுறிப்பிடத்தக் கது. (க-161)

### வலைப் பந்தாட்டம்

## கிறாஸ் கொப்பேர்ஸ் வெற்றி

யாழ்பாணம் மார்ச் 23

தெல்லிப்பழை உ. அ. அதி பர் பிரிவிலுள்ள கழகங்கட் கிடையே நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டபோட்டியில் கிறாஸ் கொப்பேர்ஸ் கழக அணி சம்பியனானது.

சென் அந்தனீஸ்அணியுடன் நடந்த இறுதிப் போட்டியில் கிறாஸ் கொப்பேர்ஸ் அணி 36–12 புள்ளிகள் அடிப்படை யில் வெற்றி பெற்றது.

இப்போட்டிக்கு திருமதி வசந்தா கெங்கேஸ்வரன் மத்தியஸ்தம் வகித்தார். (மு)

### வயோதிபரின் சடலம் அடக்கம்

பச்சிலைப்பள்ளி, மார்ச் 23

பளை தென்னம் தோட்டம் ஒன்றில் இறந்து கிடந்தவயோ திபரின் சடலம் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டது. (ஒ—117

## பிறந்த நாள் வாழ்த்து



### ★ செல்வன் டினேஸ் ★

குரும்பசிட்டியைச் சேர்ந்த டாக்டர் சின்னத்துரை யின் மகன் அம்பிகைதாஸ் றதிவதனி ஆகியோரின் மகன் டினேஸ் (23-03-1990) இன்று தனது நாலாவது பிறந்த நாளை ஜேர்மனியில் கொண்டாடுகின்றார்.

இவரை வாழ்த்துபவர்கள் ஜேர்மன் டடி, மம்மி, ஜேர்மன் அப்பம்மா, புன்னாலைக்கட்டுவன் டாக்டர் பிரேமா அன்ரி (ஜேர்மன்), அங்கிள், சங்கர், மச்சான் ஜோய், மச்சாள், ஜேர்மன் சுசி அன்ரி, றொக்கின் அங்கிள், ஜேர்மன் கலா அன்ரி, மச்சான் றொகின், ஜேர்மன் சித்தப்பா, ஜேர்மன் ரவி மாமா, சாவகச் சேரி அனுஷா அன்ரி, புன்னாலைக்கட்டுவன் அம்மப்பா அம்மம்மா, பூட்டன், சசி அண்ணா, ஜீவன் அண்ணா எல்லோரும் துர்க்கை அம்மன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

ந. சின்னையா,
நாச்சிமார் கோவிலடி,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(2935)


## சித்திரை மாத சுற்றுலா

* இந்தியாவில் உள்ள பிரபல ஆலயங்களைத் தரிசித்தல்.
* தென் இந்தியாவில் கல்வி கற்க விரும்பு வோர்க்கு தகுந்த வசதிகள் செய்து கொடுத்தல்.
* பகவான் சாயிபாபாவின் தரிசனம்.

இன்றே நாடுங்கள்

### ★ துர்க்கா தேவி ரூர்ஸ் ★

இராமையா செட்டியார் ஒழுங்கை, (சாந்தி தியேட்டர் முன்) யாழ்ப்பாணம்.

கிறீன் ஐலன் பீச் இன் 58A, உபதிஸ்ஸ றோட், கொத்தலாவலை காடன், பம்பலப்பிட்டி.

[சி-4119]


## நகரசபை வவுனியா
## கேள்வி அறிவித்தல்

புதிய பஸ் நிலையத்தில் புதிதாக அமைக்கப் பட்ட தளமாடிக் கடைகளும் மேல்மாடிக் கடைகளும் வாடகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 19-04-90ந் திகதி பிற்பகல் 2.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் அதேதினம் பிற்பகல் 2.15ற்கு கேள் விச்சபை முன் திறக்கப்படும்.

18 – 04 – 90ந் திகதி பிற்பகல் 3.00 மணிவரை கீழ்க்குறிப்பிட்டதற் கிணங்கிய கொடுப்பனவுகளைச் செலுத்தி உரிய கேள்விப்படிவங்களை நகரசபை அலு வலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கேள்வி அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''புதிய பஸ்நிலைய கடை இல, ........... க்கான கேள்வி'' என்று குறிப்பிட்டு, செயலாளர் நகரசபை, வவுனியா என்ற முகவரியுடன், நகரசபை அலுவலகத்தில் வைக்கப்பட்ட பெட்டியுள் குறித்த காலத்திற்கு முன் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஏற்கனவே நகரசபையினால் வாடகைக்கு கடை பெற்றவர்கட்கு எக்காரணம் கொண்டும் பிறிதொரு கடை வாடகைக்கு வழங்கப்பட மாட்டாது.

ஏனைய விபரங்களையும், கேள்வி நிபந்தனை களையும் அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

| கடை விபரம் | மீளளிக் கப்படாத படிவக் கட்டணம் | மீளளிக் கப்படும் வைப்புப் பணம் | கேள்விக் காரரின் மிகக் குறைந்தகேள் வித் தொகை |
|---|---|---|---|
| தளமாடி இல. 50-52 | 100/- | 500/- | 75,000/- |
| மேல்மாடி இல. 61-84 | 100/- | 500/- | 40,000/- |
| 87-88 | 100/- | 500/- | 40,000/- |
| 91-93 | 100/- | 500/- | 40,000/- |
| 94-97 | 100/- | 500/- | 35,000/- |
| 98-103 | 100/- | 500/- | 30,000/- |
| 105-113 | 100/- | 500/- | 30,000/- |

இராசா தணிகாசலம்
செயலாளர்,
நகரசபை, வவுனியா.

நகரசபை அலுவலகம்,
வவுனியா, 19-03-1990.

[ஒ-4078]


மீண்டும்

## ஓர் அரிய சந்தர்ப்பம்

அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கான

**S. L. A. S**

(இலங்கை நிர்வாக சேவை)

மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

Aug மாதமளவில் நடைபெறவிருக்கும் இப்பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

பல தனித்துவம் வாய்ந்த விரிவுரையாளர்களின் இணைந்த சேவை

### ஆரம்பம்: 25-03-90

மு. ப. - 9.00 மணி

பாடநெறி:-

கிரகித்தல், நுண்ணறிவு, விடயஆய்வு.

★ விரிவுரைகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
★ கட்டணம் ரூபா 150.00 (மாதாந்தம்)
★ இலவச பாடக்குறிப்புகள்

விபரங்களுக்கு:

## ASTAN INSTITUTE

166/1, Hospital Road,
JAFFNA

(A. S. சங்கரப்பிள்ளை கட்டிடம் 1-ஆம் மாடி)

[சி-4019]



## விவசாயிகளுக்கோர் நற்செய்தி!

மிளகாய் செடிகளில் ஏற்பட்டிருக்கும்
எரிகுருமன் - குருமன் போன்ற இலைசுருட்டல்
நோய்களை முற்றாக அழிக்க

லங்கெம் வழங்கும்

(ஓன்கோல் 40°/o EC)

பாவியுங்கள்

(செந்நிற – மஞ்சள் நிற மைற்ஸ் – அழுக்கணவன் – செதில் பூச்சிகளை கட்டுப்படுத்த வல்லது)

LANKEM
ලංකෙම් லங்கெம்

லங்கெம் விவசாயிகளின் தோழன்

தலைமைக் காரியாலயம்:

## லங்கெம் சிலோன் லிமிட்டெட்

760, பேஸ்லைன் வீதி, கொழும்பு - 9.
698292 — 6

விபரங்களுக்கு: V. வடிவேல்

லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்,
219, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம்.

★ பீடைநாசினிகள் ஆபத்தானவை!
★ அவதானமாக பாவிக்கவும்!!

[சி-4122]



## External Pharmacist Examination

### Ceylon Medical College Council
Colombo

இலங்கை மருத்துவக் கல்லூரி சபை கொழும்பு நடாத்தும்

வெளி வாரி பாமசிஸ்ற் பரீட்சை

மேற்படி பரீட்சைக்குரிய 8வது பயிற்சி நெறி வகுப்புகள் 24-03-90 ஆரம்பமாகின்றன

தகைமைகள்:- க. பொ. த (சாதாரணம்) ஆங்கிலத்தில் — சித்தி விஞ்ஞான பாடம் ஒன்றில் — திறமைச் சித்தி

### சிறந்த செயல் முறை பயிற்சி

* இலவச ஆங்கில வகுப்புகள்
* 25 வருட அனுபவம் உடைய தகைமை பெற்ற விரிவுரையாளர் குழு
* பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழும் வழங்கப்படும்.

உங்கள் பதிவுகளுக்கு:-

## North Ceylon Technical Institute

14, St. Peter's Lane,
Hospital Road,
JAFFNA.

[சி-4123]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம் மார்ச் 23
யாழ். பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தின் 14 ஆவது பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை சங்க நிலையத்தில் நடைபெறவுள்ளது. (க)

## வானொலி நிகழ்ச்சிகள்

### 23- 03- 1990

| | |
|---|---|
| 5.00 | நாதாஞ்சலி |
| 5.05 | திருமுறைப்பாடல்கள் |
| 5.30 | பாமாலை |
| 5.45 | சைவ நற்சிந்தனை |
| 5.50 | இஸ்லாமிய நற்சிந்தனை |
| 5.55 | போதி மாதவனின் போதனைகள் |
| 6.00 | வர்த்தக சேவை |
| 6.30 | செய்திகள் |
| 6.40 | செய்தித்தாள் கண்ணோட்டம் |
| 7.00 | வர்த்தக சேவை |
| 7.30 | பாடசாலைக் கூட்ட நிகழ்ச்சி |
| 7.45 | மாகாணச் செய்திகள் |
| 7.50 | வர்த்தக சேவை |
| 8.00 | வாத்திய மஞ்சரி |
| 8.15 | மெல்லிசைப் பாடல்கள் |
| 8.30 | உறுது மஞ்சரி |
| 9.00 | வர்த்தக சேவை |
| 10.00 | இசையமுதம் |
| 10.30 | பக்தி மஞ்சரி |
| 11.00 | நாதஸ்வரம் |
| 12.00 | வர்த்தக சேவை |
| 12.45 | செய்திகள் |
| 1.00 | வர்த்தக சேவை |
| 6.00 | செய்திகள் |
| 6.15 | திருவாசகம் |
| 6.45 | துதிப்பாடற் பயிற்சி |
| 7.00 | களத்துமேடு |
| 7.15 | விவசாய நாடகம் |
| 7.30 | தவக்கால கத்தோலிக்க நிகழ்ச்சி |
| 7.50 | உலகச் செய்திகள் |
| 8.00 | முஸ்லிம் நிகழ்ச்சிகள் |
| 9.00 | செய்திகள் |
| 9.20 | பக்திப் பாடல்கள் |
| 9.30 | செந்தமிழ் வளர்த்த செம்மல்கள் |
| 9.45 | காதாப்பிரசங்கம் |
| 10.30 | நினைவில் நிறைந்தவை |
| 11 00 | ஒலிபரப்பு முடிவு. |

## சார்க்...

பாலான உறுப்பு நாடுகள் மாநாட்டை மாலைதீவில் நடத்த வேண்டும் என்றே விரும்புகின்றன.

சார்க்கின் அடுத்த மாநாட்டை 1991 இல் இலங்கை நடத்தலாம் என்றும் அந்த நாடுகள் மாற்று யோசனை தெரிவித்துள்ளன. (இ-எ)


## 6ஆம் மாத நினைவஞ்சலி



கிட்டினன் ராதா

மண்ணில்: 14 – 01 – 1969

விண்ணில்: 07 – 10 – 1989

அன்பினால் எம்மை ஆட்கொண்டீர், உம் அன்பிற்கு நாம் அடி பணிந்தோம், ஆண்டுகள் பல சென்றாலும் உம் சொல்லையும், செயலையும் நாம் மறவோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 23 – 03 – 1990 இல் இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்:

தாய், சகோதர, சகோதரிமார், சித்தப்பாமார், சித்திமார், அம்மம்மாமார், மாமாமார், அத்தைமார், பெரியம்மாமார், சின்னம்மாமார், ஆசைஐயா, ஆசைஅம்மா, அக்காமார், அத்தான்மார்

'பாரதி வீதி'
பத்தமேனி,
அச்சுவேலி.

(2937)


## பயிலுநர் ஆசிரியர் நியமனம்

# கரவெட்டியில் தெரிவானோர்

யாழ்ப்பாணம். மார்ச் 23
கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட பயிலுனர் ஆசிரியர் விவரம் வருமாறு:-

**ஆரம்ப கல்வி**

த. வசந்தா, - வதிரி, சி. இரத்தினேஸ்வரி - உடுப்பிட்டி, க. கிருபாலமூர்த்தி - வல்வெட்டித்துறை, திருமதி வ. ரஞ்சினி - கரவெட்டி, அ. இராசக்லோசனா-கரவெட்டி, சி. வசந்தலீலா - வல்வெட்டித்துறை, சி. அன்னராணி - அல்வாய், சி. சாந்தினி - கரவெட்டி, ம. உதயராணி - கரவெட்டி, ந. விமலேஸ்வரி-அல்வாய். து. வாசுகி- கரவெட்டி, அ. விமலேந்திரன்- அல்வாய், திருமதி இ. புஸ்பராணி - கரவெட்டி, செ. சிவலிங்கராசா- இமையாணன்.

**இந்துசமயம்**

இ. தவமணி - வல்வெட்டித்துறை, க. சந்திரவதனா-கரணவாய்.

**றோமன் கத்தோலிக்கம்**

ஞா. ஜஸ்மின் - நெல்லியடி, மேரி காமலிற்றா ஞானமலர்-கரவெட்டி மேற்கு, ம. டொரீன் புஸ்பராணி - நெல்லியடி.

**றோமன் கத்தோலிக்கம் அல்லாதது**

வே. கிருபைநேசன் - வதிரி, ஞா. சாந்தரூபினி - அல்வாய்,

**தமிழ்**

சி. செல்வரஞ்சினி - கரணவாய், த. கலாவதி - கரவெட்டி.

**சிங்களம்**

தி. கிருஸ்ணகுமாரி - கரவெட்டி, யோ. ஜசிந்தா - கரவெட்டி மேற்கு.

**விஞ்ஞானம்**

செல்வி. கு. அப்புத்துரை - இமையாணன், வ. உதயமலர்-கரவெட்டி, க. பத்மராதா - அல்வாய், ச. தேவமாலினி- வதிரி.

**ஆங்கிலம்**

க. சுப்பிரமணியம் - அல்வாய், கா. தேன்மதி - அல்வாய். ஆ. பகீதரன் - அல்வாய், த. தனகுலவதி - கரவெட்டி, ச. வதனராணி - உடுப்பிட்டி.

**உடற்பயிற்சி**

சி. கௌரி-அல்வாய், ஆ. மதிவதனி - கரவெட்டி.

**சமூகக்கல்வி**

சி. தர்மலிங்கம் - அல்வாய், த. உமா - அல்வாய் தெற்கு.

**சித்திரம்**

செ. செல்வராணி - துன்னாலை தெற்கு. சி. மகேஸ்வரி - இமையாணன், ம, சித்திரா - கிளவித்தோட்டம், கி. விஜயகுமார் - கரவெட்டி மேற்கு, இ. யோகாம்பிகை - துன்னாலை தெற்கு.

**சங்கீதம்**

செ. இ. நாகேஸ்வரி-உடுப்பிட்டி, மு. த. பார்த்திபன்- கரவெட்டி வடக்கு, சு. இராஜகுமாரி - கரவெட்டி கிழக்கு, வ. யோகேஸ்வரி - கரவெட்டி வடக்கு. க. அனுஷியா - கரவெட்டி, த. மங்கையர்க்கரசி- கரவெட்டி, ஏ. சந்திரகலா - அல்வாய்.

**நடனம்**

க. மலர்விழி - கரவெட்டி, செ. நிர்மலா - கரவெட்டி தெற்கு, கு. கீதாஞ்சலி - கரவெட்டி வடக்கு, செ. சூரியகலா - கரவெட்டி தெற்கு, கு. தமயந்தி - துன்னாலை தெற்கு, திருமதி வி. தேவி - கரவெட்டி, க. இரஞ்சிதமலர்- கரணவாய், கெ. சசிகலா - வதிரி.

**விவசாயம்**

இ. சாரதா - வதிரி, த. மஞ்சுளா - அல்வாய்.

**மனைப்பொருளியல்**

த. தேவரஞ்சினி - கரவெட்டி, வ. யோகேஸ்வரி - துன்னாலை தெற்கு.

**வர்த்தகம்**

ச. சறோஜாதேவி - அல்வாய் கிழக்கு. திருமதி ம. மஞ்சுளா - கரவெட்டி.

**தட்டச்சு**

த. றோஸ் ஜெகதீஸ்வரி - கரவெட்டி, இ. வெண்மதி - கரணவாய் தெற்கு.

**மரவேலை**

த. ராஜசேகரன் - வல்வெட்டித்துறை.

**மோட்டார்ப் பொறியியல்**

வை. சிவநடராசா - கரவெட்டி.

**வானொலிப் பொறியியல்**

க. கனகேஸ்வரன் - துன்னாலை வடக்கு. (உ-3)

# பருத்தித்துறையில் தெரிவானோர்

யாழ்ப்பாணம், மார்ச் 23
பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவான பயிலுநர் ஆசிரியர் விவரம் வருமாறு:-

**ஆரம்பக்கல்வி:-**

சோ. நிர்மலாதேவி - பருத்தித்துறை, நா. நாகேந்திரன்- வல்வெட்டித்துறை, ச. ஜெயரஞ்சினி - தம்பசிட்டி, ஆ. உமாதேவி - வல்வெட்டித்துறை, கு. கோமளா - வல்வெட்டித்துறை, த. புனிதவதி - புலோலி தெற்கு, மா. வாசுகி - பருத்தித்துறை, செ. பிறேமாவதி- பருத்தித்துறை, இ நந்தினி- வியாபாரிமூலை, ந. கமலாம்பிகை - பருத்தித்துறை, சூ. சூரியமலர் - வல்வெட்டித்துறை, தி. வசந்தமலர்-புலோலி, சு. ஜெயமதி- வல்வெட்டித்துறை, த. சிவமணி - பருத்தித்துறை, இ. தனலட்சுமி-புலோலி தெற்கு, சி. தேவகுமாரி - பருத்தித்துறை, பொ. இலங்கேஸ்வரி - பருத்தித்துறை, த. ஜெயலட்சுமி - வல்வெட்டித்துறை, சூ. அமுதவில்லி- அல்வாய், ச.சந்தானலட்சுமி - தொண்டைமனாறு, ந. கலா - பருத்தித்துறை, கோ. அன்னபூரணம் - வல்வெட்டித்துறை, க. செல்வராணி - பருத்தித்துறை, வி. சற்குணராஜா - பருத்தித்துறை, சிறீகுமரபரன் - பருத்தித்துறை, சு. சாந்தகுமாரி - பருத்தித்துறை, ம. சிவனேஸ்வரி - பருத்தித்துறை, திருமதி அ. வேணுராதா - வல்வெட்டித்துறை.

**இந்துசமயம்**

குமாரி அனுஷ்யா-பருத்தித்துறை, கே. சாந்தா - பருத்தித்துறை.

**கிறீஸ்தவம் (றோ. க)**

யூலிஸ்ராணி - பருத்தித்துறை, அ. மேரிவசந்தா - பருத்தித்துறை, ஆன் வினித்தா - புலோலி

**கிறீஸ்தவம் (றோ. க. அல்லாதது)**

ரஞ்சன் செல்வகுமார் - அல்வாய்.

**ஆங்கிலம்**

ரீ. சுகந்தன் - பருத்தித்துறை, எஸ். காஞ்சனா-பருத்தித்துறை, கே. சிவதாஸ் - பருத்தித்துறை,பா.இந்திரா- பருத்தித்துறை, க. சிறீஸ்சந்திரன் - வல்வெட்டித்துறை, தி. உதயமூர்த்தி - அல்வாய், செ. செல்வரஜனி - புலோலி தெற்கு, செ. சிவராஜா - பொலிகண்டி, த. வேணி - புலோலி தெற்கு, ஆ. பிறைசூடி - புலோலி தெற்கு.

**தமிழ்**

வி. சோ. சிறீதேவி-புலோலி கிழக்கு, கே. பரமேஸ்வரி - புலோலி, எஸ். யாதவானந்தன் - பருத்தித்துறை, கே. குகநாயகி - பருத்தித்துறை, கோ. அகலியலட்சுமி - வல்வெட்டித்துறை.

**விஞ்ஞானம்**

எஸ். புஸ்பலதா- பருத்தித்துறை, வி. சுகிர் தரஞ்சினி - அல்வாய், எஸ். சத்தியபாமா புலோலி தெற்கு. சி. முருகதாசன் - புலோலி, க. சாந்தினி அல்வாய்.

**சுகாதாரமும் உடற்கல்வியும்**

ரீ. சுகன்யா - வல்வெட்டித்துறை, ம. அமலேஸ்வரி-வல்வெட்டித்துறை, இ. கலைச்செல்வி - தும்பளை, சு. இ. இராஜேஸ்வரி-புலோலி.

**சமூகக் கல்வி**

இ. ஞானசவுந்தரி-வல்வெட்டித்துறை, ஞா. செல்வராணி-பருத்தித்துறை, சி. பத்தினிதேவி - [illegible], சு. அமலோற்பராணி - பருத்தித்துறை, மு. சிவகுமாரன் - அல்வாய் வடக்கு,

**சித்திரம்**

ரீ. கணேஸ்வரன்- புலோலி, அ. பற்றிமாராணி-பருத்தித்துறை, எஸ். இராசேஸ்வரி - கரவெட்டி, செ. இரஞ்சிதமலர்- பருத்தித்துறை, க. கலைவாணி- வல்வெட்டித்துறை: சு. சற்குணராசா - பருத்தித்துறை.

**சங்கீதம்**

எஸ். சந்திரவதனா- புலோலி தெற்கு, ரீ, செல்வரதி-பருத்தித்துறை, வ. ஜெயந்தி-பருத்தித்துறை, தி. வாசுகி - பருத்தித்துறை, மு. சாரதாதேவி-தொண்டமனாறு,ஆ.செல்வராணி-பருத்தித்துறை, சு. பிரேமலதா - புலோலி கிழக்கு, செ. விஜயகுமாரி - புலோலி.

**நடனம்**

தெ. கலாமதி - பருத்தித்துறை, இ. தமிழ்மலர்-பருத்தித்துறை, என். சந்தியாகுமாரி-பருத்தித்துறை, செ, செல்வராணி பருத்தித்துறை, சி. தேவமனோசரி - பருத்தித்துறை. கு. தேவகி - பருத்தித்துறை, கோ. வளர்மதி-பருத்தித்துறை.

**வாழ்க்கைத்திறன்**

பீ. சுரேந்திரன் - பருத்தித்துறை, இ. சாந்தீஸ்வரி-பருத்தித்துறை.

**விவசாயம்**

இ. ஞானசக்தி - பருத்தித்துறை, ஆ. பிறிஜெற் யோஜினி-புலோலி.

**வர்த்தகம்**

எம். செல்வச்சந்திரன்-பருத்தித்துறை.

**தட்டச்சும் சுருக்கெழுத்தும்**

மோ. தவமணி-பருத்தித்துறை.

**மரவேலை**

என், மகேந்திரராசா- தொண்டமனாறு,

**வானொலி**

எம். இரவீந்திரன் தொண்டமனாறு.

**நூல்நிலையம்**

த. தங்கமலர், பருத்தித்துறை. (இ-11)

## தட்டுப்பாடு நீங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ் மாவட்டத்தில் பெற்றோலுக்கு நிலவிய தட்டுப்பாடு நேற்றுடன் நீங்கிவிட்டது.

யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனை முகாமையாளர் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார். (இ-9)

## பனிப்புயல்

புதுடில்லி, மார்ச் 23
வட இந்தியாவில் இமாசலப் பிரதேசத்தில் ஏற்பட்ட பனிப்புயல், மலைச்சரிவினால் பெரும் சேதங்கள் ஏற்பட்டன என்று அறிவிக்கப்பட்டது.

இதுவரை குறைந்தது 25 பேர் மரணமடைந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. (உ)

## இலங்கையுடனான உறவை புதுப்பிக்க சவூதி தயார்!

லண்டன், மார்ச் 23
இஸ்ரவேல் நலன்காக்கும் பிரிவை இலங்கைஅரசு கடந்த செவ்வாய் மூடியதைத் தொடர்ந்து சவூதி அரேபியா இலங்கையுடனான தூதரக உறவுகளை மீண்டும் புதுப்பித்துக்கொள்ள இணங்கியுள்ளது.

84ஆம் ஆண்டு சவூதி அரேபியா உறவைத் துண்டித்தமையால் இலங்கைக்கு அனேக உதவி, ஒத்தாசைகள் கிடைக்காமற்போனமை குறிப்பிடத்தக்கது. (ச)

# விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பார்களா?

## அரசு ஏன் மௌனம் சாதிப்பு சபையில் லஷ்மன் கேள்வி

கொழும்பு, மார்ச் 23
தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பார்களா? இது தொடர்பாக அரசாங்கம் ஏன் மௌனம் சாதிக்கிறது.

அவசரகாலச்சட்டத்தை நீடிப்பது தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் உரையாற்றிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. திரு. லஷ்மன் ஜெயக்கொடி மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் பேசியதாவது:

இந்திய அமைதிகாக்கும் படை முற்றாக வாபஸ் பெறப்பட்டபின் அடுத்த ஏப்ரலில் வடக்கு- கிழக்கில் ஈழம் உருவாவது நிச்சயமாகியுள்ளது.

வடக்கு- கிழக்கில் புலிகள் வரிகள் வசூலிப்பதற்கு இலங்கைப் பொலீஸாரும், இராணுவத்தினரும் உதவி வருகிறார்கள்.

ஈ. பி. ஆர். எல். எவ்.கட்சியானது ஒரு தலைபட்சமாக ஈழப்பிரகடனம் செய்ததுக்கு கண்டன அறிக்கை வெளியிட விடுதலைப்புலிகளுக்கு சுமார் ஒரு வாரம் எடுத்தது.

ஈ. பி. ஆர். எல். எவ். கட்சியினர் திறமைசாலிகள் என அவர்கள் உள்ளூர மகிழ்ச்சி கொண்டிருப்பார்கள்.

வடக்கு- கிழக்கு மாகாண சபையைக் கலைத்து அதற்கான தேர்தல்களை நடத்துவது எப்போது?

அவ்வாறு தேர்தல் ஒன்று நடைபெறும் பட்சத்தில் அதற்கு தேர்தல் ஆணையாளர்தான் பொறுப்பாக இருப்பாரா அல்லது வேறுயாராவது அக்கடமையை மேற்கொள்வார்களா?

இந்தத் தேர்தலில் இலங்கைப் பொலீஸாரும், இராணுவத்தினரும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவேண்டிய தேவை இல்லாமல் இருப்பதால் அவர்களை தெல் பகுதிகளுக்கு அனுப்பி விடுவது உகந்ததாக இருக்கும்.

வடக்கு- கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு பற்றி இலங்கை அரசு ஏன் மௌனம் சாதிக்கிறது?

இப்படி திரு. லஷ்மன் ஜெயக்கொடி மேலும் பேசினார். (இ-ச)

## தலைகுனிவு...

வலிகாமம் பகுதி அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் முதலில் இதுவரைஇறந்த போராளிகளுக்கு மௌனாஞ்சலி செலுத்தப்பட்டது.

திரு. ஆஞ்சநேயர் தமது உரையில் தொடர்ந்து கூறியதாவது:

மட்டக்களப்பு பகுதியில் முதலில் அன்னம்மா டேவிட் உண்ணாவிரதம் மேற்கொண்டார். ஆனால் அவர் அந்தப் போராட்டத்தை தொடர முடியாமல் பாதியிலேயே கைவிட்டார். இதனால் எமக்கு களங்கமும் தலைகுனிவும் ஏற்பட்டது.

அவ்வேளையில் - தமது இரண்டு மகன்களையும் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் அநியாயமாக கொன்றுபோட்ட நிலையில் - எமக்கு ஏற்பட்ட இந்த களங்கத்தை துடைக்க துணிந்தாள் இந்த தாய்.

உலகில் பல்வேறு விடுதலை இயக்கங்கள் இருக்கின்றன அவற்றிற்கு பல்வேறு உலக நாடுகள் பல்வேறு வகைகளில் உதவி வருகின்றன. ஆனால் அவை உறுதி பெறவில்லை.

ஆனால் எமது இயக்கம் அன்னை பூபதி, திலீபன் மற்றும் போராளிகளின் இழப்புக்களினாலேயே இன்று உறுதி பெற்றிருக்கிறது என்றார்.

யாழ் மாவட்ட மகளிர் முன்னணி பொறுப்பாளர் மாலினி தமது உரையில் - "உலகிலேயே உண்ணா நோன்பிருந்து இறந்தவர்களில் முதலாவது பெண் அன்னை பூபதி" என்றார்.

மக்கள் முன்னணி உறுப்பினர் திரு. கா. செல்வநாயகம் தமது உரையில் -

அன்னை பூபதி, திலீபன் போன்றவர்களின் பெயரை உச்சரித்து தமிழன் தலை நிமிர்ந்து வாழலாம் - என்றார்.

திரு. த. இராசநாயகம், செல்வி அம்பலம்பிள்ளை தேவா ஆகியோரும் உரையாற்றினர்.

கூட்டத்தை தொடர்ந்து கலாச்சார பிரிவினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (உ-9)

# மக்கள் தொண்டர் படையினர் 30பேர் இன்னும் கோட்டைக்குள்

யாழ்ப்பாணம் மார்ச் 23
குடிமக்கள் தொண்டர் படையைச்சேர்ந்த சுமார் 30 பேர் யாழ். கோட்டைக்குள் முடங்கிக் கிடக்கின்றனர் என்று அறிய வருகின்றது.

இந்தியப் படையினரால் மாகாண பொலிஸ் படைக்காகத் தெரிவு செய்யப்பட்டு இந்தியப் படையினருடனேயே இருந்து, அவர்களுடனேயே ரோந்துப் பணியில் ஈடுபட்டுவந்தவர்களில் சிலரே இவ்வாறு முடங்கிக்கிடக்கின்றனர்.

இந்த பதவிக்கு சுமார் ஆயிரம்பேர் தெரிவாகிய போதிலும் இவர்களில் பெரும்பாலோர் வேலையைவிட்டு ஓடிவிட்டதும் எஞ்சியவர்களை யாழ் கோட்டையில் ஒப்படைத்து விட்டு படையினர் சென்றதும் தெரிந்ததே.

ஆனால் தற்போது பொலீஸார் வங்கிகளில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளனர். துரையப்பா விளையாட்டரங்குக்கு அண்மையில்பொலீஸ் நிலையம் அமைத்து சில கடமைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயினும் இந்த குடிமக்கள் தொண்டர் படையினர் கோட்டையை விட்டு வெளியேறுவதில்லை என்றும், கடமைகள் எதிலும் ஈடுபடாது கோட்டைக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர் என்றும் அறியவருகின்றது. ஆயினும் 2½ஆயிரத்து ஐநூறு ரூபா வரையான சம்பளம் மட்டும் மாதாந்தம் வழங்கப்பட்டு வருகின்றதாம். (சு-9)

## பாண்டிச்சேரி

# சட்டசபையில் அமளி துமளி

புதுவை, மார்ச் 23
பாண்டிச்சேரி சட்டசபைக் கூட்டத்தில் பெரும் அமளி துமளி நேற்று ஏற்பட்டது.

சபாநாயகர் தெரிவு நடைபெறும் என்று தற்காலிக சபாநாயகர் திரு. தபசு அறிவித்தவுடனேயே கூச்சல், குழப்பம் தொடங்கியது.

புதிதாக நியமிக்கப்பட்ட நியமன உறுப்பினர்கள் சபாநாயகர் தேர்தலில் வாக்களிக்க முடியுமா? என்ற கேள்வியை எதிர்க்கட்சிகளான இந்திரா காங்கிரஸூம் அ.தி.மு.கவும் எழுப்பினர். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தில் தற்காலிக சபாநாயகர் திரு. தபசு கூட்டத்தை ஒத்திவைத்து விட்டு வெளியேறினார்.

அதனைத் தொடர்ந்து தி.மு.க. எம். எல். ஏ. திரு. இராமநாதன் தலைமையில் சட்டசபை மீண்டும் கூடியது. அப்போது தி.மு.க. எம்.எல். ஏ. திரு. பழனிராஜா சபாநாயகராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதற்கு முன்னர் எதிர்க்கட்சிஉறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேறினர்.

# ராஜ்மோகன் காந்தியும் ராஜ்ய சபை எம். பி யானார்

புதுடில்லி, மார்ச் 23
மாநில சட்ட சபைகளால் ராஜ்ய சபா எம்.பிக்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களில் ராஜ்மோகன் காந்தியும் ஒருவர் என நேற்று அறிவிக்கப்பட்டது.

ஏனையோரில் முக்கியமானவர்கள் மத்திய அமைச்சர்களான திரு. எம். ஜி. கே. மேனன், திரு. எம். எஸ். குருபாதசுவாமி, திரு. ராஜாராமண்ணா ஆகியோராவர். இவர்கள் அனைவரும் தேசிய முன்னணியைச் சேர்ந்தவர்கள்.

1989 நவம்பர் பொதுத் தேர்தலில் திரு. ராஜீவ் காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டவர் திரு. ராஜ்மோகன் காந்தி என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து 7 பேரும் உத்தரப் பிரதேச மாநிலத்திலிருந்து 4 பேரும் ராஜஸ்தானிலிருந்து 3 பேரும் ராஜ்ய சபை எம்.பிக்களாக போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

கர்நாடகம் மற்றும் மத்திய பிரதேசம் ஆகிய மாநில சட்டசபைகளில் தலா ஒவ்வொரு எம்.பி போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

## கோபாலசாமி..

இருந்து 4ஆகக் குறைகிறது.

இந்த புதிய எம். பிக்கள் எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி தொடக்கம் தமது பதவியில் செயற்படுவர்.

திரு. கோபாலசாமியும் திரு கிருஷ்ணனும் ஏற்கனவே ராஜ்யசபா எம். பிகளாக உள்ளனர். இவர்களின் தற்போதைய பதவிக்காலம் ஏப்ரல் 2உடன் முடிவடைகிறது (உ-எ)

## முறைகேடுகள்...

டம், உதவி அரச அதிபர் பிரிவு, பெயர், விலாசம் சம்தந்தப்பட்ட பட்டியலில் இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அறிவிக்கும்படி கல்வி அமைச்சர் எம். பி. க்களைக் கேட்டிருக்கிறார்.

தெரிவு குறித்து அதிருப்தியுடையவர்கள் தத்தம் எம்.பிக்கள் மூலம் விசாரணை நடத்தும்படி கல்வி அமைச்சைக் கோரமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்கு உகந்தது.

" ஜீவாகாரம் "

இதில் தேவையான அளவு கலோரி, புரதம், விற்றமின், தாதுப்பொருட்கள் அடங்கி உள்ளது.

அண்ணா தொழிலகம்
இணுவில்.

# உதயன்

23 - 03 - 1990 வெள்ளிக்கிழமை

அருந்துங்கள்!

'அண்ணா கோப்பி'

100 வீதம் சுத்தமான கோப்பியினால் தயாரிக்கப்பட்டு 100g, 50g, 15g பக்கட்டுக்களில் விற்பனையாகின்றது. இவற்றை பாவித்த பின் வெற்றுப்பைக்கட்டுக்களைக் கொடுத்து இனாம் பொருட்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அண்ணா கோப்பிக் கடை,
யாழ்ப்பாணம்-

# நிவாரணக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம் மார்ச், 23 நாளை சனிக்கிழமையும் மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் அதாவது 24 ஆம், 25 ஆம் திகதிகளில் பல வங்கிக் கிளைகளில் சுயதொழில் பாதிப்புக்கான ஊக்குவிப்பு நிவாரணம், மீளக்குடியமர்தல் நிவாரணம் ஆகியவை வழங்கப்பட உள்ளன.

### காங்கேசனில்

காங்கேசன்துறை இலங்கை வங்கிக்கிளையில் சுயதொழில் பாதிப்புக்கான ஊக்குவிப்பு நிவாரணம் 4000 ரூபா 24ஆம் 25 ஆம் திகதிகளில் வழங்கப்பட இருக்கின்றது.

24 ஆம் திகதி நகுலேஸ்வரம், துர்க்காபுரம், காங்கேசன்துறை தெற்கு, தெல்லிப்பளை வடமேற்கு, தெல்லிப்பளை, பன்னாலை, மாவிட்டபுரம், கொல்லன்கலட்டி, வீமன்காமம், கட்டுவன், மயிலிட்டி தெற்கு, குரும்பசிட்டி, வயாவிளான், மயிலிட்டி வடக்கு, மயிலிட்டித்துறை, பலாலி கிழக்கு, பலாலி மேற்கு ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 752 குடும்பங்களுக்கு இந்த நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

25 ஆம் திகதி அளவெட்டி வடக்கு, தையிட்டி, காங்கேசன்துறை வடக்கு, அளவெட்டி தெற்கு கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த 662 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

இந்தத் திகதிகளில் நிவாரணம் பெறாதவர்களின் பணம் அரசாங்க செயலகத்துக்கு திருப்பி அனுப்பப்பட்டு விடும் என்று வங்கி அதிகாரி அறிவித்துள்ளார்,

### ஆஸ்பத்திரி வீதிக்கிளை

இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

24ஆம் திகதி மானிப்பாய்க் கிராம சேவையாளர் பிரிவுக்கும், 25 ஆம் திகதி சுதுமலை கிராம சேவையாளர் பிரிவுக்கும் இங்கு வைத்து நிவாரணம் வழங்கப்படும்.

அதே நேரம் 24 ஆம் திகதி யாழ் ஸ்ரான்லி வீதி வங்கிக் கிளையில் வண்ணார் பண்ணை வடக்கு, மேற்குக் கிராமசேவையாளர் பிரிவினருக்கு நிவாரணம் வழங்கப்படும்.

### நெல்லியடி பருத்தித்துறையில்

வடமராட்சிப் பகுதி மக்களுக்கு 24 ஆம் 25 ஆம் திகதிகளில் மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்படவிருக்கின்றது.

24 ஆம் திகதி இலங்கை வங்கியின் நெல்லியடிக் கிளையில், சரவெட்டி மேற்குக் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். அன்று பருத்தித்துறைக் கிளையில், அல்வாய் மேற்கு துன்னாலை வடக்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவினருக்கு வழங்கப்படும்.

25 ஆம் திகதி நெல்லியடிக் கிளையில் கரணவாய் கிழக்கு, கரணவாய் மேற்கு கரணவாய் மத்தி ஆகிய கிராம சேவையாளர் பிரிவினருக்கு வழங்கப்படும். அன்று பருத்துறைக் கிளையில் புலோலி மேற்கு, அம்பன் பகுதி மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.

### மக்கள் வங்கி ஸ்ரான்லி கிளை

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 2 ஆயிரத்து 292 குடும்பங்களுக்கு மீளக் குடியமர்தல் நிவாரணம் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் வழங்கப்படவிருக்கிறது.

24 ஆம் திகதி குப்பிளான் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 1156 குடும்பங்களுக்கும், 25 ஆம் திகதி ஏழாலை வடக்கு சுன்னாகம் கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 1136 குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

### இன்று முதல் 4 தினங்களுக்கு

இலங்கைவங்கி ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் அமைக்கப்பட்டுள்ள செயலக ஊழியர்களின் விசேஷ கருமபீடம் மூலம் இன்று (வெள்ளிக்கிழமை) சாவகச்சேரி கிழக்கைச் சேர்ந்தவர்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணம் வழங்கப்பட இருக்கிறது.

நாளை சனிக்கிழமை சாவகச்சேரி வடக்கு, மிருசுவில் கிராமசேவையாளர் பிரிவினருக்கு நிவாரணம் வழங்கப்படும்.

ஞாயிற்றுக்கிழமை தாவளை, இத்தாலை, வரணி இத்தாலை, நாவற்குழி, தனங்கிளப்பு, கோகிலாகண்டி, மந்துவில், கொடிகாமம் கிராமசேவையாளர் பிரிவினருக்கு வழங்கப்படும்.

திங்கட்கிழமை மீசாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவினருக்கு வழங்கப்படும்.

தினமும் சராசரியாக 600 பேருக்கு நிவாரணம் வழங்கப்படுவதாக செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

செயலக ஊழியர்கள் கிழமையில் ஏழு நாட்களும் இந்த கருமபீடம் ஊடாக நிவாரணம் வழங்கி வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (இ-3)

### மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை

சங்கானை உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கான உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்புப் பணம் ரூபா 4 ஆயிரம் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமையும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் யாழ் கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் காலை 8. 00 மணி முதல் நண்பகல் 1. 00 மணி வரை வழங்கப்படும்.

24 ஆம் திகதி, அராலி மேற்கு, அராலி தென்கிழக்கு, அராலி வடக்கு, சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் கிழக்கு மூளாய் பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் —

25 ஆம் திகதி சங்கானை மேற்கு, சங்கானை தெற்கு, சங்கானை கிழக்கு, தொல்புரம், சங்கரத்தை, வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை தெற்கு, வட்டுக்கோட்டை கிழக்கு, பொன்னாலை பிரிவுகளைச் சேர்ந்தோருக்கும் நிவாரணம் வழங்கப்படும்.

## காங்கேசன் கிளையிலும் விசேஷ கருமபீடம்

காங்கேசன்துறை இலங்கை வங்கியில் நிவாரணக் கொடுப்பனவுகளை வழங்க விசேட கருமபீடம் ஒன்றை எதிர்வரும் திங்கட்கிழமை அரசாங்க செயலக அதிகாரிகள் அமைக்க இருக்கின்றனர்.

இந்தக் கருமபீடம் மூலமாக மீளக்குடியமர்தல் நிவாரணம் மட்டும் வழங்கப்படும்.

கிழமையில் ஏழு நாட்களும் இந்த நிவாரணத்தைச் செயலக ஊழியர்கள் வழங்குவார்கள்.

வங்கி ஊழியர்கள் சனி ஞாயிறு நாட்களில் மட்டும் நிவாரணம் வழங்குவார்கள்.
[இ-3]

### யாழ்ப்பாணம்-கோப்பாய்:

## நிவாரணம் பெறாதோருக்கு கடைசிச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 23 யாழ்ப்பாணம், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இதுவரை மீளக்குடியமர்தல் இரண்டாம்கட்ட நிவாரணம் பெறாதவர்கள் எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன் இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வீதிக் கிளையில் வேலைநேரத்தில் பெறவேண்டும். இல்லையேல் பணம் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுவிடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது,

இதுவரை பணம் பெறாதவர்கள் விவரம் வருமாறு:

**யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு**

குருநகர் மேற்கு (ஜே. 39)-74 குடும்பங்கள், குருநகர் கிழக்கு (ஜே. 40)-37 குடும்பங்கள்.

**கோப்பாய் உதவி அ. அ. பிரிவு**

பத்தமேனி (ஜே 126)-22 குடும்பங்கள், இடைக்காடு (ஜே 127 - 42 குடும்பங்கள், அச்சுவேலி வடக்கு (ஜே 128)-18 குடும்பங்கள், அச்சுவேலி தெற்கு (ஜே 129)-31 குடும்பங்கள், புத்தூர் கிழக்கு (ஜே 130) - 14 குடும்பங்கள், வாதரவத்தை (ஜே 131) -06 குடும்பங்கள், புத்தூர்மேற்கு (ஜே 132)04குடும்பங்கள், ஆவரங்கால் (ஜே 133)-10 குடும்பங்கள், சிறுப்பிட்டி (ஜே 134) - 11 குடும்பங்கள், நீர்வேலி (ஜே 135)-44 குடும்பங்கள், ஊரெழு (ஜே -137)-19 குடும்பங்கள், உரும்பராய் கிழக்கு (ஜே 138-41 குடும்பங்கள். உரும்பராய் மேற்கு (ஜே 139) - 26 குடும்பங்கள், கோப்பாய் வடக்கு (ஜே 140)-45 குடும்பங்கள், கோப்பாய் தெற்கு (ஜே 141)-19 குடும்பங்கள், இருபாலை(ஜே142)-92 குடும்பங்கள். (இ-3)

## முடிவை மாற்றுமாறு அமெரிக்கா கேட்கிறது

வாஷிங்டன், மார்ச் 23 இஸ்ரவேலுடனான ராஜீய உறவைத்துண்டிக்கும் முடிவை மறு பரிசீலனை செய்யும்படி இலங்கை அரசை அமெரிக்கா கேட்டுள்ளது.

இது சம்பந்தமாகத் தாம் இலங்கை அரசைக் கேட்டிருப்பதாகவும் இலங்கை தனது முடிவை மாற்றிக் கொள்ளும் என்று நம்புவதாகவும் அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் கூறினார். (இ-எ)

### படைப் பிரிவில் சேர விரும்பினால்

## ஆயுத ஒப்படைப்பு அவசியம்

### விடுதலைப் புலிகள் குறித்து ரஞ்சன்

கொழும்பு, மார்ச் 23 தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் பொலீஸ் மற்றும் இராணுவம் முதலியவற்றில் சேர்ந்துகொள்ள விரும்பினால் அவர்கள் ஆயுதங்களை ஒப்படைப்பது அவசியமாகும்.

அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முன்கண்ட தகவலை வெளியிட்டார்.

ஆயுதப்படைகளில்அவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு, ஒழுக்க நெறிகள் அவர்களுக்கு புகட்டப்படும்.

இப்படி அமைச்சர் விஜேரத்னா மேலும் சொன்னார்.
[இ-எ]

## தொண்டா பிரதமராவாரா? 'ஜூனியர் விகடன்' கூறுகிறது

கொழும்பு மார்ச், 23 இலங்கையின் புதிய பிரதமராக திரு. தொண்டமான் நியமிக்கப்படவிருக்கிறாரா?

ஜூனியர் விகடன் மார்ச் 14ஆம் திகதி இதழில் வெளியான செய்தி ஒன்றில் திரு. தொண்டமான் பிரதமராக நியமிக்கப்படவிருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது.

அச்செய்தி வருமாறு:-

இலங்கையில் தோட்டத் தொழிலாளர்களாக உள்ள தமிழர்களின் மாபெரும் தலைவரான தொண்டமான் விரைவில் அந்த நாட்டுப் பிரதமராகப் பதவியேற்கப் போகிறார்! தமிழர்களைக் கவர ஜனாதிபதி பிரேமதாஸ தொண்டமானைப் பிரதமராக்க முடிவு செய்திருக்கிறாராம்.

இலங்கை அரசியலில் பிரேமதாஸா, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஆகியோருக்கு எல்லாம் மூத்தவர் தொண்டமான் இப்படி அந்த செய்தி கூறுகிறது.

## இந்தியப் படையினருக்கு மின்சாரம் வழங்கியதால் ரூபா 50 லட்சம் நஷ்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 23 இந்திய அமைதிப்படையினருக்கு மின்சார விநியோகம் மற்றும் உபகரணங்களை வழங்கியது தொடர்பாக உள்ளூராட்சி சபைகள் 50 லட்சம் ரூபா நஷ்டத்தை அடைந்துள்ளன.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால இத் தகவலை வெளியிட்டார்.

இதுவரை தமக்கு கிடைத்த தகவல்களின்படி [illegible] சம் வரை நஷ்டம் கணக்கிடப்பட்டிருப்பதாகவும் [illegible] சில உள்ளூராட்சி சபைகள் தமக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் பற்றிய விவரங்களை இதுவரை அனுப்பவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபைக்கு 33 லட்சத்து 30 ஆயிரத்து 608 ரூபாவும்—

சாவகச்சேரி நகரசபைக்கு 4 லட்சத்து 51 ஆயிரத்து 582 ரூபாவும் —

காங்கேசன்துறை பிரதேச [illegible] 79 ஆயி[illegible]ரம் ரூபாவும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (இ-3)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர்வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 23 - 03 - 1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## சூட்டுக்கு 5 பேர் பலி!

இஸ்லாமாபாத், மார்ச் 23 பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் உள்ள ஹைதரபாத் நகரில் நேற்று மோட்டார் சைக்கிளில் சென்ற மர்ம மனிதர்கள் சரமாரியாகச் சுட்டதில் ஐந்து பேர் உயிரிழந்தனர்.

## வின்சென்ட் யாழ் வருகிறார்

யாழ்ப்பாணம், மார்ச் 23 யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்பு வேலைகளைப் பார்வையிட இராஜாங்க அமைச்சர் திரு, வின்சென்ட் பெரேரா 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்வார் என அறிய வருகிறது.

யாழ்ப்பாணத்தில் தங்கி இருக்கும் போது அவர் தீவுப் பகுதிக்கான படகுச் சேவையை சீர் செய்ய புதிய படகு ஒன்றை வழங்குவார் என்றும் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைகளைப் பார்வையிடுவார் எனவும் தெரிய வருகிறது. (க- 3)

## காந்தி சமாதியில் சீன மந்திரி

புதுடில்லி, மார்ச் 23 சீன வெளியுறவு அமைச்சர் ஜாங்ஷியாங் நேற்று புதுடில்லியில் ராஜ்கோட் சென்று காந்தி சமாதிக்கு மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தினார்.

அப்போது திபெத் அகதிகள் சீன அமைச்சருக்குக் கறுப்புக் கொடி காட்டி கோஷங்கள் எழுப்பினர்.

பொலீஸார் ஆறு திபெத் அகதிகளைக் கைது செய்து காவலில் வைத்தனர்,

முன்னர் சுதந்திர நாடாக இருந்த திபெத் இப்போது சீனாவின் ஆட்சியின் கீழ் இருந்து வருகிறது.

சீனஆக்கிரமிப்பை தொடர்ந்து வெளியேறிய திபெத் அகதிகளே இந்தஆர்பாட்டத்தை நேற்று நடத்தினர்.
[ இ - அ]

## கொள்ளை முறியடிப்பு

ஹோமகம ஆஸ்பத்திரிக்கு சம்பளம் வழங்குவதற்காக நேற்றுக்காலை கொண்டுவரப்பட்ட 5 லட்சம் ரூபா பணத்தைக் கொள்ளை அடிக்க ஆயுதந்தரித்த இரண்டு நபர்கள் எடுத்த முயற்சியைப் பொலீஸார் முறியடித்தனர்

மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதம் தரித்த இரண்டு நபர்கள் பணப்பையை பறித்துக் கொண்டு ஓடினர்

பொலீஸார் துரத்திச் சென்று இரண்டு சந்தேகநபர்களையும் பிடித்தனர். கொள்ளை போன பணமும் மீட்கப்பட்டது. (உ—)

## பாலஸ்தீன பிரதிநிதி நன்றி தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 22 இலங்கையில் உள்ள இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடிவிடும்படி ஜனாதிபதி பிரேமதாஸா உத்தரவிட்டதற்கு இலங்கைக்கான பலஸ்தீனப் பிரதிநிதி அபூரஸீத் நன்றி தெரிவித்திருக்கிறார்.

இந்த விடயத்தில் அக்கறையுடன் செயற்பட்ட சபாநாயகர் எம். எச். முகமதுவை நேற்று நேரில் சென்று சந்தித்த அவர் தமது நன்றியை ஜனாதிபதிக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்,
( உ )

## சைக்கிள் கடன் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23 அரச ஊழியர்களுக்கான சைக்கிள் வாங்குவதற்குரிய கடன் 2000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

## போராளிகளுக்கு எதிராக தமிழகத்தில் நடவடிக்கை!

சென்னை, மார்ச் 23 ஈழத்தமிழ்ப் போராளிகள் இனிமேல் தமிழ் நாட்டில் ஆயுதங்களுடன்நடமாடவோ முகாம்கள்அமைத்துப் பயிற்சி பெறவோ தமிழக அரசு அனுமதிக்காது.

- இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

இராமநாதபுரத்தில் தமிழ்ப் போராளிகள் நடத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி இந்திரா காங்கிரஸ் எம். எல். ஏ. குமரி அனந்தன் ஒரு தலைப்புப் பிரேரணை ஒன்றை நேற்று தமிழ்நாடு சட்ட சபையில் கொண்டு வந்தார்.

அப்போதே கலைஞர் கருணாநிதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

தமிழகத்தில் இலங்கைத் தமிழ்ப் போராளிக் குழுக்களின் நடவடிக்கைகள் தடுக்கப்படும்.

இராமநாதபுரம் சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவாகி உள்ளது. தனிப்புலனாய்வு பிரிவு அமைக்கப்பட்டு புலன் விசாரணை நடத்தப்படுகிறது. சம்பவத்தில் ஈடுபடுத்தப்பட்ட வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இனிமேல் இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க பாதுகாப்பு நடவடிக்கைகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

வெடிகுண்டுகள், வெடி மருந்துகள் போன்றவற்றைக் கண்டறிய மோப்பநாய்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன-- என்றார். (உ-எ)

## அமிர், யோகேஸ் கொலை புலிகள் செய்யவில்லை

### அமைச்சர் ரஞ்சன் தகவல்

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் திரு. அமிர்தலிங்கம், திரு. வெ. யோகேஸ்வரன்ஆகியோர் கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு விடுதலைப் புலிகள் காரணமல்ல,

வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்பு துணை அமைச்சருமான திரு. ரஞ்சன்விஜேரத்னா நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

பத்திரிகைச் செய்திகள், பேட்டிகள் போன்றவற்றில் என்ன தெரிவிக்கப்பட்டிருந்தாலும்,

எமக்குக் கிடைத்த தகவல்கள், பொலீஸ் விசாரணைகள் ஆகியவை இக் கொலைச் சம்பவங்களுக்கு விடுதலைப் புலிகள் காரணம் அல்ல என்பதையே தெளிவுபடுத்துகின்றன என்றார் அமைச்சர்.

இந்தச் சம்பவங்கள் குறித்து அண்மையில் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் பற்றி கருத்து வெளியிடுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். (உ-உ)

## அமைச்சர் யாழ். வருகிறார்

இந்து சமய,இந்து கலாசார தமிழ் அலுவல்கள் இராஜங்க அமைச்சர் திரு.பி.பி. தேவராஜ் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவிருக்கின்றார்.

இங்கு ஐந்து நாட்கள் தங்கி இருக்கும் அமைச்சர் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வார், (இ—3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அக்னெஸ்

திருமதி அக்னெஸ் காலமானார். அன்னார் இராயப்பு செல்லத்தம்பியின் அருமை மனைவியாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து அர்ச். சம்பேதுரு சம்பாவிலு சேமக்காலைக்கு இன்று 23- 3- 90 மாலை 4. 30 மணிக்கு எடுத்துச் செல்லப் படும்.

தகவல்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாரந்தனை மேற்கு,
ஊர்காவற்றுறை

(12096)

### மகேந்திரன் திருநாவுக்கரசு

தெற்கு அளவெட்டி பெருமாக்கடவையைச் சேர்ந்தவரும், யாழ் கயிலாயபிள்ளையார் கோவிலடியில் வாழ்ந்தவரும் முன்னாள் யாழ். கச்சேரி கிளை இலங்கை வங்கி சிறாப்பரும், தற்சமயம் யாழ் வீரமாகாளி ஆலயத்தில் கணக்காளராக பணி புரிந்த வருமாகிய மகேந்திரன் காலமானார். இவர் திருமதி மங்களம் சோமசுந்தரத்தின் தம்பியும், திருமதி யோகேஸ்வரி பவானந்தன், கமலேஸ்வரி (சுட்டா), இராமச்சந்திரன், (Quarry Engineer - வவுனியா), பாலச்சந்திரன் (வீரகேசரி கொழும்பு), தர்மச்சந்திரன் (U.K) ஆகியோரின் சகோதரனும், காலம் சென்ற Dr. வில்லியம். சோமசுந்தரம், (சோமா), பவானந்தன், மேனகா, ரவிமதி, ஆகியோரின் மைத்துனரும் Dr. சுறாஜ், சோமசுந்தரம் (அஸ்மா சிகிச்சை நிபுணர்), சிற்றாஜ், சுபறாஜ், டக்ஷாயினி ஆகியோரின் பெரிய மாமனாரும், பிரமிளா, ஊர்மிலா, ருக்மிலா பிரேம்குமார், நிரோசன் ஆகியோரின் பெரியப்பாவும் திருமதி வனோ சோமசுந்தரத்தின் சித்தப்பாவும், விவிஷாலின் பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பு பொரளையிலுள்ள பாணி றேமன்ட்ஸ் [Barney Raymonds Palour) ல் சனிக்கிழமை (24-03-90) பி.ப. 4 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் தாழ்மையுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம்

33,4 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(12095)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org